விலை ரூபா 6.00


# ஈழநாடு வாரமலர்

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஐப்பசி 5 இதழ் 260

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 22 - 10 - 1995


## கொழும்பில் கறுப்புமழை

(கொழும்பு)

எரிந்து கொண்டிருக்கும் எண்ணெய்க் குதங்களிலிருந்து கிளம்பும் கரும் புகையினால் மேல் மாகாணத்தில் சீதோஷ்ண நிலையில் திடீரென பெரும் மாற்றம் ஏற்பட்டிருப்பதாக கொழும்பு காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இதனால் கொழும்பு மாவட்டத்திலும் அதன் அயற் பகுதிகளிலும் பரவலாக 'கறுப்பு மழை' பெய்ய ஆரம்பித்துள்ளது.

நேற்று ஸ்ரீஜெயவர்த்தனபுர நாடாளுமன்றப் பகுதியிலும், மற்றும் காலி பேருவளைப் பகுதியிலும் இந்தக் கறுப்பு மழை பெய்துள்ளது.

இந்த மழையால் நனைந்தவர்களின் உடம்பில் கறுப்பு நிறம் ஒட்டிக்கொண்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டதாக செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். (எ-ம்)

★ தமிழீழப் போராட்டத்தில் இணையுமாறு

# தமிழ் இளைஞர் யுவதிகளுக்கு விடுதலைப்புலிகள் அழைப்பு

## நிலைமையை விளக்கி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மண்ணைக்காப்பதற்காக யாழ். குடாநாட்டு இளைஞர் யுவதிகளை உடனடியாக போராட்டத்தில் இணையுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் துறையினர் அழைப்பு விடுத்துள்ளனர். இது தொடர்பாக நேற்று அறிக்கை யொன்றும் வெளியிடப்பட்டது.

அவ்வறிக்கையின் விபரம் வருமாறு:

### புதிய பரிமாணம்

கடந்த ஒரு சில நாட்களில் குடாநாட்டுப் போர் புதியதொரு பரிமாணத்தை அடைந்துவிட்டது.

பலாலி படைத்தளத்தின் எல்லைகளை விஸ்தரிப்பது என்ற நோக்குடன் நடாத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் என்ற கட்டத்தில் இருந்து இப்போது குடாநாட்டைக் கைப்பற்றுவதற்கான இறுதி படையெடுப்பு என்கின்ற நிலைக்கு போரின் பரிமாணம் மாறிவிட்டது.

கடந்த திங்கட்கிழமை (16-10-95) "ரிவிரச" என்ற பெயரில் சிங்களப்படைகள் ஆரம்பித்த இராணுவ நடவடிக்கை பலாலித்தளத்தின் எல்லைகளை விரிவுபடுத்தும் வரையறுக்கப்பட்ட நோக்கம் கொண்டது அல்ல. மாறாக குடாநாட்டை முழுமையாகக் கைப்பற்றுவதற்கான ஆரம்பகட்ட இராணுவ நடவடிக்கையே அதுவாகும். சிங்கள அரசின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் ரத்வத்த, சிங்கள இராணுவத்தளபதி லெப். ஜெனரல் ஜெரி. டி. சில்வா மற்றும் விமானப்

(8ம் பக்கம் பார்க்க)

## பொலநறுவை பகுதியில் 66சிங்களவர் வெட்டி கொலை

(பொலநறுவ)

பொலனறுவ எல்லைப்பகுதியில் 66 சிங்களவர்கள் ஆயுதம் தாங்கிய நபர்களால் கொல்லப்பட்டனர்.

பொலனறுவ எல்லைப்புறத்தில் மூன்று சிங்களக் குடியேற்றங்களுக்குள் நுழைந்த ஆயுதம் தாங்கிய நபர்கள் அங்கிருந்த 66 சிங்களவர்களை கொன்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை இச்சம்பவம் நடைபெற்றுள்ளதாக பி. பி. சி. தெரிவித்தது. -ம-ி

## கொழும்பு நகரில் புலிகள் ஊடுருவல்

(கொழும்பு)

கொழும்பு நகரின் பல பகுதிகளில் நேற்றுக்காலை முதல் பல விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் ஊடுருவியுள்ளதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் கொட்டகதெனியா தெரிவித்துள்ளார்.

இவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கையில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். -ரி

## கொழும்பில் இரு தமிழர்கள் சிங்களவரால் அடித்துக்கொலை

(லண்டன்)

கொழும்பில் நேற்று இரு தமிழர்கள் அடித்துக் கொல்லப்பட்டதாக பி. பி. சி. தெரிவித்தது.

ஆயுதமேந்திய சிங்களக் கும்பலினால் இவர்கள் அடித்துக்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இனக்கலவரத்தை தூண்டும் நோக்குடன் இக்கொலைகள் நிகழ்த்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து கொழும்பிலுள்ள தமிழர்களிடையே பெரும் அச்சமும் பதற்றமும் நிலவு

(8ம் பக்கம் பார்க்க)

## சீதுவைப் பகுதியில் தேடுதல் வேட்டை

(கொழும்பு)

கொழும்பு சீதுவைப் பகுதியில் நேற்று பெரும் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தெமட்டகொட, கொலன்னாவ வீதியில் கந்தசாமி சந்தியில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அரச தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

கொலன்னாவ, ஊறுகொடவத்த, மட்டக்கொட, வனாத்தமுல்ல ஆகிய இடங்களிலும் நேற்று தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

வனாத்தமுல்லையை சேர்ந்த வேலவனுடன் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. -ரி



கொலன்னாவயில் இடம் பெற்ற எண்ணெய்க்குத தாக்குதலின் பின் துப்பாக்கி நபர்களுக்கும் அரசபடைகளுக்கும் நடந்த சமரில் துப்பாக்கி நபர்களால் சேதமாக்கப்பட்ட படையினரின் வாகனங்களை பொலிஸார் பார்வையிடுவதையும், இச்சம்பவ செய்தியை நேரில் சேகரிக்கச் சென்ற போது ராணுவத்தால் சுடப்பட்டு கழுத்தில் காயமடைந்த பிபிஸியின் கொழும்பு முகவர் ஜோர்ஜ் ஆர்னியையும் படங்களில் காணலாம்.

## எண்ணெய்க்குதங்கள் தொடர்ந்து எரிகின்றன

(கொழும்பு)

கொலன்னாவ, ஊறுகொடவத்த எண்ணெய்க் குதங்கள் தொடர்ந்து எரிந்துகொண்டிருக்கின்றன.

இக்குதங்களில் ஏற்பட்டுள்ள தீயைக் கட்டுப்படுத்துவதற்கென மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதியில் மறைந்திருக்கும் தீவிரவாதிகளை சுற்றிவளைக்கும் நடவடிக்கையில் பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து ஈடுபட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. -ரி


★ தரமான சுவையான ஐஸ்கிறீம்
★ குளிர்பானங்கள்
★ ஸ்பெஷல் நட்ஸ் வனிலா
★ கிறீம் சர்பத்
★ புரூட்சலட்
★ சிற்றுண்டி வகைகள்

ராஜா குளிர்சுவையகம் (ராஜா கிறீம் ஹவுஸ்)

36, சந்தோசம் தெரு,
யாழ்ப்பாணம். (ஏ-5365)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஆண்டு 3, 4, 5, 6, 7, 8 9, 10, O/L, A/L மாதிரி வினாத்தாள்கள் (Tutes) 50 வீதம் தள்ளுபடி விலையில் விற்பனையாகின்றன, BOND யாழ்ப்பாணம். (ஏ-5382)

## மலிவு விற்பனை

சகல விதமான தட்டச்சு இயந்திரங்கள், ரோணியோ இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக்கொடுக்கப்படும். மற்றும் தட்டச்சு, ரோணியோ இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் 66 மணிக்கூட்டு கோபுர வீதி, ஆஸ்பத்திரி முன்பாக, யாழ்ப்பாணம். (எ-5351)

## கணிதம்

Distinction, Credit. பெறுமதிடைய (6 வாரங்களில்) இது வரையும் சித்தியடையாதவர்களும், துரித மீட்டல் முறையால் ஆரம்பத்திலிருந்து B. Sc. ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. (சி 1712)

## ஆங்கிலக் கல்வி
[Spoken English]

சுலபமான முறையில் ஆங்கிலம் பேசப் பயில, நா. விக்னேஸ்வரன், இல. 426, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (எ 1713)

## விஷேச அன்ரனா

ரூபவாஹினி, மட்ருஸ் நிகழ்ச்சிகளுக்கு அன்ரனா பொருத்துவதற்கும் வீடியோ கமரா, ரி. வி. டெக், றேடியோக்கள், மணிக்கூடுகள் திருத்துவதற்கும் வீனஸ், டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி. Our Qualified Experienced Technical & Tutorial Staff T. Thanabalasingam B. Sc. (Ceylon) Dip-in Electornic Engineering (Lond) (Specialist in V. C. R. Service) (ஏ-5388)

## பலவித பொருட்கள்

சகலவிதமான துவிச்சக்கர வண்டிகளும், உதிரிப்பாகங்களும், சிற்றிசன், சீக்கோ, கஷியோ கைக்கடிகாரங்கள், சுவர், மேசை மணிக்கூடுகள், சுடுதண்ணீர்ப் போத்தல், சகலவிதமான ரோச் லைற், விளையாட்டுப் பொருட்கள் [Sports Goods] சகாய விலையில் பெற்றுக்கொள்ள: புதிய நகர பல்பொருள் வணிக நிலையம் (நியூ சிற்றி றேடர்ஸ்) 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (ஏ-5368)

## வியாழமாற்றம்

உங்களுக்கு எப்படி? சோதிடர் V.A. சிவராசா, [வேலணை] 152 B அரசடி வீதி கந்தர்மடம் ஜாதகம் எழுத, விவாகப் பொருத்தம்பார்க்க, அதிர்ஷ்ட எண்களில் பெயரமைக்க உங்கள் எதிர்காலம் பற்றிச்சிந்திக்கும் நேரத்தில் சந்தித்துப்பாருங்கள். [சி 1716]

## பிரம்புப் பின்னல்

சகல விதமான கதிரைகளும் உங்கள் வீட்டுக்கு வந்து பின்னித் தருபவர்கள். ராஜன் பின்னலகம், 286 ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணம். [ஏ 5414]

**ஆண்டு – 5**
**புலமைப் பரிசில்**
+
பாடசாலை அனுமதி பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் - விடைகளுடன் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும். அடுத்த வெளியீடு 22.10.95 இன்று ஞாயிறு.
**BOND**
யாழ்ப்பாணம்
(ஏ-5381)

## வைத்தியம்

செங்கண்மாரி (Hepatitis) இரப்பை அல்சர், ஆஸ்மா, மூட்டுவாத ரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலைகாலவியல், சரும நோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம், 121, 2-ம் குறுக்கு வீதி, பறங்கித் தெரு, யாழ்ப்பாணம். (சி-1711)

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

# விசேஷ அன்ரனா

ரூபவாஹினி, மட்ருஸ் நிகழ்ச்சிகளுக்கு
அன்ரனா பொருத்துவதற்கும்
வீடியோ கமரா, ரி. வி. டெக், றேடியோக்கள்,
மணிக்கூடுகள் திருத்துவதற்கும்

**வீனஸ், டில்கா வாச் &**
**றேடியோ வேக்ஸ்**

கிளை
பஸ் நிலையம், சாவகச்சேரி
Our Qualified Experienced
Technical & Tutorial Staff

T. THANABALASINGAM B.Sc, [Ceylon]
Dip-in Electronic Engineering [Lond]
[Specialist in V C R Service] [A 5392]

இளங்கவிஞர்களுக்கான இதழ்

# ★ கவிதை ★

விற்பனையாகிறது !

(ஏ-1715)

வழமைபோல்
✶ இறைச்சிக்கோழி ✶ முட்டை
✶ செவ்விளநீர் கன்றுகள்
ஆகியவற்றை

# அண்ணா பாம்

மருதனாமடத்தில்
பெற்றுக்கொள்ளலாம்.

(ஏ-5415)

**Diploma in Pharmacology**

**28 10-95ல் ஆரம்பமாகின்றன**
**(சனி, ஞாயிறு வகுப்புகள்)**

விரிவுரையாளர்:

**Dr. V. P. சுந்தரராஜன்**

குறிப்பு: சுதேசிய, ஹோமியோபதி மருத்துவர்களுக்கும் மருத்துவ மாணவர்கட்கும் மட்டும்.

**சாயி மருத்துவக் கல்லூரி**
இல, 10, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (ஏ 5380)

பார்த்தீர்களா ? முற்றிலும் புதிய அமைப்பில்

# அறிவுக் களஞ்சியம் - 34

★ புதிய அளவு ★ அதிக பக்கங்கள்
★ அழகிய மேலட்டை விலை ரூபா 15/- (ஏ-5407)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

# பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1995-11-20ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

பதவிகள் :

1. தற்காலிக உதவி விரிவுரையாளர் - தாவரவியல் / இரசாயனவியல் / பௌதிகவியல் / விலங்கியல் / கணனி விஞ்ஞானம் / கணிதமும் புள்ளிவிபரவியலும்.

சம்பள அளவுத்திட்டம் :

ரூபா 5, 270/- (நிலையானது) மாதமொன்றுக்கு
* (மேலதிக விபரங்கள் 1995-10-19ஆம் திகதி வெளியான உள்ளூர்ப் பத்திரிகைகளில்)

2. உதைபந்தாட்டம் / துடுப்பாட்டம் / வலைகோற்பந்தாட்டம் பெண்கள் / மேசைவரிப்பந்தாட்டம் / பூப்பந்தாட்டம் / மெய்வல்லுநர் பயிற்சிகள் / உடற்பயிற்சி விளையாட்டுகள் / சதுரங்கம் / கராட்டி / வலைப்பந்தாட்டத்தில் இடைவரவுப் போதனாசிரியர்.

கொடுப்பனவு விகிதம் :

மணித்தியாலம் ஒன்றிற்கு 75/- ரூபா;
(மாதமொன்றுக்கு 900/- ரூபா உச்ச வரம்பிற்கு உட்பட்டு)

தகைமைகள் :

1. தேசிய அணியொன்றையோ, மாவட்ட அணியொன்றையோ, தேசியப் பாடசாலை அணியொன்றையோ, இணைந்த பாடசாலை அணியொன்றையோ பிரதிநிதித்துவப் படுத்தியிருத்தல் வேண்டும்.

அல்லது

2. மாவட்ட அணியையோ, மாவட்ட இணைந்த அணியையோ மூன்றாண்டுகளுக்குக் குறையாத காலத்திற்குப் பயிற்றியிருத்தல் வேண்டும்;

அல்லது

3. விளையாட்டுத்துறை அமைச்சினால் நியமிக்கப்பட்ட பயிற்றுனராகக் குறைந்த பட்சம் மூன்றாண்டுகளுக்குப் பயிற்றுதலில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்;

அல்லது

4. பல்கலைக்கழக மட்டத்தில் விளையாட்டுக்களைப் பயிற்றுதலில் அனுபவம் உடையவராய் இருத்தல் வேண்டும்;

அல்லது

5. பாடசாலையொன்றில் அல்லது களரியொன்றில் ஐந்தாண்டுப் பயிற்றுதல் அனுபவத்துடன் குறைந்த பட்சம் மூன்றாண்டுகளுக்கு மாவட்ட விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டியொன்றில் வீரமுதல்வரை அல்லது இரண்டாம் இடத்தைப் பெற்றவரை உருவாக்கியிருத்தல் வேண்டும்;

ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கியில் அல்லது நிதிக்கிளையில் சிறுப்பரின் முகப்பு மேசையில் 20/- ரூபாவைச் செலுத்தி இப் பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையின் சிரேட்ட உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும்; தபால் மூலம் படிவங்களையும் இதர விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட காசுக்கட்டளை / தபாற்கட்டளையொன்றை 23X10 ச.மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்ட 2/- ரூபா முத்திரையொட்டப் பெற்ற கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத்திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலிருந்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் அந்நிறுவனங்களின் தலைவர்களின் மூலம் அனுப்புதல் வேண்டும்;

விதிக்கப்பெற்ற படிவத்தில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்ப முடிவுத் திகதியின் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் தெளிவில்லாமல் விபரங்கள் எழுதப்பட்ட விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

குறிப்பு :
சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்தனுப்பப்படல் வேண்டும்;

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

1995-10-12; (எ-5419)

# பொதுநலவாய மாநாடு - கெடுகுடி

## களநிலை - சதித்திட்டம் - ஆடம்பரக் கார்கள் - உணவுக் கப்பல்

கடந்த வாரம் முடிவடைந்த 41-வது பொதுநலவாய நாடாளுமன்ற மாநாட்டுக்கு வருகை தந்திருந்த வெளிநாட்டுப் பேராளர்களுக்கு கொழும்பு வாழ் தமிழர்களின் செயற்பாட்டுக்குழு தமிழர்களின் இனப்பிரச்னை சம்பந்தமாக ஒரு கடிதத்தை எழுதியிருந்தது. அதில் தமிழருக்கு எதிரான வன்முறையை கைவிட்டு உடனடியாக விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டுமென்று சிறிலங்கா அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுமாறு அது வேண்டியுள்ளது. சமாதானத்திற்கான பேச்சுவார்த்தையை



விட்டுவிட்டு சமாதானத்துக்கான போரை அரசு ஆரம்பித்துள்ளமையை அக்கடிதம் கண்டித்ததோடு ஜனாதிபதியின் தீர்வு ஆலோசனைகள் கருத்து ஒருமைப்பாடு இல்லாத வெறும் கருத்துக்கள் தான் என்றும் தமிழர்களைப் பொறுத்தளவில் இந்த யோசனைகள் சமாதானத்தை எய்துவதற்கு எந்த விதத்திலும் பொருத்தமற்றதாகும் என்றும் கூறியுள்ளது.

### கெடுகுடி

பொதுநலவாய பிரதிநிதிகளும் தாங்கள் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்தபோது தொடரும் யுத்தம் சிறிலங்காவைப் பாரிய அழிவுக்கு இட்டுச்செல்வதோடு பொருளாதாரத்தையும் சீர்குலைத்துவிடும் என்றும் எச்சரித்துள்ளார்கள். அத்துடன் மீண்டும் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு தீர்வுக்கு வருவது வரவேற்கத்தக்கது என்றும் புத்திமதி கூறியுள்ளனர். ஆனால் கெடுகுடி சொல் கேளாது போர்ச் சன்னதம் கொண்டு ஆடுகிறார் சந்திரிகா. ஆனால் கொழும்பில் அழிவு தொடங்கிவிட்டது.

### களநிலை

போர் நடத்தித் தீருவேன் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவேன் என்று சந்திரிகாவும் மாமனும் கூறினாலும் யதார்த்தத்தில் குடாநாட்டைப் பிடிப்பது இலகுவான காரியமல்ல சண்டே ரைம்ஸ்சின் இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் யாழ்ப்பாணத்தை இராணுவத்தினர் பிடிப்பது கஸ்டமான விடயம் என்று கூறியுள்ளார். அதற்கு அவர் காட்டும் காரணங்களில் ஒன்று யாழ். மக்களின் பூரண ஆதரவை விடுதலைப்புலிகள் பெற்றுள்ளதோடு அதிக அளவில் போராளிகளை உருவாக்கியுள்ளமையுமாகும் என்றும் கூறுகிறார். இன்றைய யாதார்த்தமும் கள நிலையும் அவர் கூறியது போல்தான் காணப்படுகிறது.

### சதித்திட்டம்

வெரித்தாஸ் வானொலி தனதுஉண்மையின் எண்ணங்கள் பகுதியில் கூறுவதுபோல் விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுக் காலத்திலேயே தனது அரசு போர் தயாரிப்புகளில் ஈடுபட்டிருந்தது என்று சந்திரிகா கூறியிருந்தது புலிகளை ஒதுக்கிவிட்டு இனப்பிரச்னைக்குத் தீர்வு காண முனைந்ததெல்லாம் அரசின் சூழ்ச்சியையும் சதித்திட்டங்களையுமே அம்பலப்படுத்துகிறது. தமிழ்மக்கள் படுகொலை செய்யப்படுவதால் சர்வதேசக் கருத்து தனக்கு எதிராகத் திரும்புவதை தடுக்கும் நோக்கில்தான் அதிகாரப் பகிர்வுத் திட்டத்தையும் சூழ்ச்சியாகவே சந்திரிகா முன்வைத்தார் என்பதும் இப்போது வெள்ளிடைமலை.

### ஆடம்பரக் கார்கள்

ஐக்கியதேசியக்கட்சி ஆட்சியின்போது அரசியல்வாதி

**ச. தியாகராசா**

களுக்கு ஆடம்பரக் கார்கள் கொள்வனவு செய்யப்பட்டமைக்கு எதிராக பொ. ஐ. முன்னணி அரசு ஆட்சிக்கு வந்த காலத்தில் கண்டனங்களைத் தெரிவித்தது தெரிந்ததே. ஆனால் இப்போது நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாவிப்புக்காக அதிநவீன ஆடம்பரசொகுசுக் கார்களை அரசாங்கம் இறக்குமதி செய்துள்ளது. ஒவ்வொன்றும்

## வார சாரம்

13 லட்சம் ரூபா பெறுமதியான 73 ரெயோ டொயாட்டா லான்ட் குருசேர்ஸ் கார்கள் வெளிநாட்டில்



இருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இதைவிட அரசியல்வாதிகளின் பாவனைக்கு 21 கோடி 60 லட்சம் ரூபா பெறுமதியான 82 நவீன பஜிரோ வாகனங்களும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. எதிர்க்கட்சியில் இருக்கும்போது கதைக்கிற கதை ஆட்சிக்கு வந்தவுடன் மறந்துபோவது சிறிலங்காவில் மாறி மாறி வரும் ஒரு செயல்.

ஜே. ஆர். பதவிக்கு வருவதற்கு தமிழர்களின் உதவியை நாடினார். தமிழர்களும் ஏமாந்த சோனகிரிகள் போல ஐ. தே. கட்சிக்கு வாக்களித்தனர். ஆறில் ஐந்து பங்கு பெரும்பான்மையுடன் ஜே. ஆர். ஆட்சிக்கு வந்தார். ஆட்சிக்கு வந்ததும் தமிழர்களுக்கு கொடுத்த வாக்கை மறந்து பயங்கரவாதம் எந்த உருவில் இருந்தாலும் அடக்கிவிட்டு வரும்படி தனது மருமகனை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினார். அதன் விளைவு இன்றும் தொடருகிறது.

### உணவுக் கப்பல்

வடபகுதிக்கான உணவுப்பிரச்சினை முன்னர்போல்குழப்ப நிலைக்கு வந்துகொண்டிருக்கிறது. அரசு உணவுப்பொருள்களை காங்கேசன்துறையில் இறக்கவேண்டுமென்றுசொல்லுகிறது. செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு காங்கேசன் துறைக்குச் செல்லும் கப்பல்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாதென விடுதலைப் புலிகள் ஏற்கனவே கூறி

(7ம் பக்க தொடர்ச்சி)

---

நமது நோக்கு

## கொலன்னாவ அனர்த்தங்கள்

தகவல் தணிக்கை பிரகடனப்படுத்தப்பட்டது. யுத்த நடவடிக்கைகள், அதாவது படையினர் தமிழ் மக்களை இம்சிப்பது வெளியாருக்குத் தெரியாமல் இருப்பதற்கே. கொலன்னாவ எரிபொருள் களஞ்சிய தொகுதிகள்மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள், தீவைப்பு ஆகியவை தமிழர்களுக்கு எதிரான போர் நடவடிக்கை அல்ல. அதனால்போலும் அரச வானொலி தொலைக்காட்சிச்சேவை ஆகியன கொலன்னாவ, உறுகொடவத்தை போன்ற இடங்களிலிருந்து சிங்கள மக்கள் கையில் அகப்பட்ட பொருட்களை எடுத்துக் கொண்டு பீதியுடன் இடம்பெயர்ந்த விபரங்களை ஒலி, ஒளிபரப்பின. ஆனால் இவ்விதம் செய்ததை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் மிகவாகக் கண்டித்துள்ளார். அவ்விதம் செய்தது பொதுமக்களிடையே பதற்றத்தை உண்டாக்கிவிட்டது என்று அவர் கூறியுள்ளார். தீர்க்க ஆலோசனை இல்லாது எடுக்கப்படும் நடவடிக்கைகள் எதிர்விளைவை ஏற்படுத்தும்.

தமிழர்களுக்கு இடர் விளைவிக்கையில் சிங்கள அரசு அத்தகைய இடர்கள் சிங்கள மக்களுக்கும் ஏற்படும் என்பதை முதலில் உணர்வதில்லை. பயங்கரவாத தடைச்சட்டம் தமிழ் இளைஞர்களின் ஆயுதப்போராட்டத்தை அடக்குவதற்காகக் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டத்தை வைத்துக் கொண்டு ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டார்கள். பின்னர் சிறிலங்காவின் தென் பகுதியில் ஜே. வி. பி.யினர் கிளர்ந்தெழுந்தபோது தமிழர்களுக்கு என்று கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் ஜே. வி. பி. கிளர்ச்சியை அடக்குவதற்கு உபயோகிக்கப்பட்டது. பத்தாயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.

அநுருத்த ரத்வத்தைக்கு வானொலி தொலைக்காட்சிச் சேவையினரைக் கண்டிப்பதற்குக் காரணமும் உண்டு. நேற்று முன்தினம் குண்டுத்தாக்குதல் நடாத்தப்பட்ட கொலன்னாவ எரிபொருள் களஞ்சியச்சாலைத் தொகுதி அடங்கிய எரிபொருள் மின்சக்தி அமைச்சு ரத்வத்தையின் பொறுப்பிலுள்ளது. அதுவுமல்லாமல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கு கங்கணம்கட்டிக் கொண்டு பிரதிப் பாதுகாப்பமைச்சர் என்ற ரீதியில் பெரும் போர் வெறியுடன் செயல்பட்டுவரும் வேளையில் அவரின் கீழிருக்கும் எரிபொருள் களஞ்சியங்களுக்கு ஏற்பட்ட அனர்த்தம் போரை மிகவும் பின்னடையச் செய்துள்ளமையும் அவரின் ஆத்திரத்துக்கு இன்னொரு காரணமாகும். யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான போர் தொடரும் என்று மார்தட்டினாலும் யதார்த்தநிலை அவ்விதமில்லை. வடக்கில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் கப்பல்கள், விமானங்கள், இராணுவ வாகனங்கள் ஆகியவற்றுக்குத் தேவையான எரிபொருள் கொலன்னாவ எரிபொருள் களஞ்சியங்களிலிருந்துதான் விநியோகமாகிறது. தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை இவ்விநியோகங்களைப் பாதிக்கும்.

பிரதிப் பாதுகாப்பமைச்சர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற எடுத்த இராணுவ தீவிர நடவடிக்கையை வெளி உலகம் உன்னிப்பாக அவதானித்து வருகிறது. இதைப் பிரிட்டிஷ் தூதுவர் ஜோன் பீல்ட் அவர்கள் வடக்கில் இராணுவ நடவடிக்கை தீவிரமடைந்தால் தெற்கில் இத்தகைய தாக்குதல் ஏதும் நடைபெறலாம் என்று நாம் எண்ணியிருந்தோம் என்றும், பொருளாதார இலக்கு குறிவைக்கப்பட்டுள்ளது என்றும், உள்ளூரில் எரிபொருள் தட்டுப்பாட்டை இந்தத் தாக்குதல் ஏற்படுத்தும் என்றும் அவர் கூறியுள்ள கூற்று நிரூபிக்கிறது.

பி. பி. சி.யும் தனது ஆய்வில் ஏற்கெனவே நலிவுற்றுள்ள சிறிலங்காவின் பொருளாதாரம் மேலும் பாதிக்கப்பட்டுள்ளது என்ற கூற்றையும் நாம் கவனிக்க வேண்டும். அந்த விமர்சனத்தில் கொழும்பில் நிலைமை வழமைக்கு வரும்வரை வடக்கில் இராணு நடவடிக்கை பற்றி அரசும் யோசிக்க வேண்டியிருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளது. எனவே ரத்வத்தையின் யாழ்ப்பாணத்தைப் பிடிக்கும் ஆசை நிராசையாகத்தான் முடியும். முன்னைய பாதுகாப்பமைச்சர்கள் செய்து பார்த்ததை இவரும் செய்ய முயன்றார். ஆனால் முடியவில்லை என்று வரலாறு கூறும்.

---

# லிபியாவிலிருந்து வெளியேற்றப்படும் பாலஸ்தீனியர்கள்

## புகலிடமின்றி தவிப்பு

## உலக வலம்

சொந்த நாடு எதுவுமின்றி அகதிகளாக உலகத்தில் பல பாகங்களிலும் பெரும் துன்ப துயரங்களை அனுபவித்த யூதர்களுக்கு 2-ம் உலகப்போரின்பின் இஸ்ரேல் நாடு உருவாக்கப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட்டது.

வந்தவர்கள் அங்கு வசித்த பாலஸ்தீனியர்களை வெளியேற்றினர். அன்றிலிருந்து பாலஸ்தீனியர்கள் அகதிகளாக சிதறி ஓடி, பல அகதி முகாம்களிலும் பல நாடுகளிலும் தஞ்சம் பெற்று வாழ்ந்து வருகிறார்கள்.

அண்மையில் உருவாக்கப்பட்ட இஸ்ரேல் - பாலஸ்தீன உடன்பாட்டின் பின்பும் பாலஸ்தீனியர்களின் ''சுயாட்சிப் பிரதேசம்'' உருவானதாகத் தெரியவில்லை. போதாக்குறைக்கு பி.எல். ஓ. தலைவர் இஸ்ரேலுடன் செய்துகொண்ட உடன்பாட்டை பல அரேபிய நாடுகள் கண்டிக்கின்றன. பல தீவிரவாத பாலஸ்தீன அமைப்புக்கள் எதிர்த்து வன்முறையில் இறங்கியுள்ளன.

இந்நிலையில் உடன்பாட்டில் ஆத்திரம் கொண்ட லிபியா தன் நாட்டிலிருந்த பாலஸ்தீன அகதிகளை, வேலை செய்பவர்களை நாட்டைவிட்டு வெளியேறுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளது.

அவர்கள் எங்கே போவார்கள், நாடு ஒன்று அவர்களுக்கென இருந்தால் அவர்கள் அங்கு செல்லலாம். 30 ஆயிரம் பேரை உடனடியாக வெளியேற உத்தரவு இதில் வெளியேறிய 13 ஆயிரம் பேர் லிபியா எல்லையில் போக இடமின்றி ''நாடற்றவர்களாக'' நிர்க்கதியற்று காத்துக்கிடக்கின்றனர். சமாதானத்தை வரவேற்ற எகிப்து கூட இந்த போக்கிடமற்ற பலஸ்தீனியர்களை ஏற்கத் தயாரில்லை.

இன்னும் ஒரு கப்பலில் 650 பாலஸ்தீனியர்கள் லிபியாவிலிருந்து வெளியேற்றப்பட்டு மத்தியதரைக் கடலில் சைபிரஸ் எல்லையில் போக்கிடமின்றி தவித்த செய்தி கடந்த வியாழன் கிடைத்தது.

மனிதாபிமான ரீதியில் இவர்களை தன் நாட்டில் ஏற்றுக் கொள்ள சிரியா முன்வந்துள்ளது.

**கவிதாஸ்**

பாலஸ்தீனியர்களை வெளியேற்றவேண்டாமென பல அரேபிய நாடுகள் லிபியாவைக் கேட்டும், அதற்கு உடன்பட லிபியா மறுத்துவிட்டது. வெளியேற்றப்பட்ட, வெளியேற்றப்படவுள்ள பாலஸ்தீனியர்கள் கதி என்னவாகும் என்பது காலம் தான் பதில் கூறும்.

அத்தியாயம் — 10

# ஈழக்கடலில் ஆழக் காலூன்றிய
# சோழர் வழியில் வேங்கைகக கடல் வீரர்

பெரும்பாலான தென்னிந்திய மன்னர்கள் இத்துறைமுகத்தினூடாகவே தமதுபோர்ப்படையைஇறக்கி இம்மண்ணை ஆக்கிரமித்திருந்தனர். வட-கிழக்கு அல்லது வடக்குத்துறை முகங்களினூடாகச் செல்லும்போது பாரிய நீரோட்டங்களின் தாக்கத்தையும் பேரலைகளையும் மட்டுமல்ல, பயங்கரமாக வீசும் காற்றுக்கும் தமது மரக்கலங்கள் திசை மாறிச் செல்லாமல் இருப்பதற்காகவே பெரும்பாலானவர்கள் வட-மேற்குத்திசையில், அமைதியே உருவாக அமைந்திருக்கும் மாந்தையை அக்காலத்தில் தெரிவுசெய்தனர் என்பதுடன், மன்னாரின் முத்தும் - யானைத்தந்தங்களும் கூட ஏராளமானவர்களைக் காந்தம்போல் கவர்ந்துஇழுத்தது எனலாம்.

## பூநகரி

மாந்தைக்கு அண்மையில் இருக்கும் பூநகரிப்பிரதேசமும் ஒரு காலத்தில் பிரபல்யம் பெற்று விளங்கியிருக்கவேண்டும் என்பதற்கு அடையாளமாக அப்பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்ட சாசனங்கள் மூலம் அறியலாம். பிற்காலத்தில், சோழர் ஆட்சியின் எச்சங்கள் பலவும் அப்பிரதேசத்தில் விடப்பட்டுச் சென்றிருக்கின்றன. (இதைப்பின்னர் விரிவாகப் பார்க்கலாம்] கிறிஸ்துவுக்குப் பிற்பட்டகாலத்தில் மாந்தைக்குப் பயணம் செய்தவெளிநாட்டு வியாபாரிகளின் கலங்கள் பூநகரிப்பிரதேசத்தில் தங்கிப்போவதுமுண்டு.

முத்து, சங்கு, மிளகு, பொன் அகில், கறுவா, அரிசி, இஞ்சி, தந்தம் போன்ற பொருட்கள் ஈழத்திலிருந்து, மாந்தையூடாகப் பிற தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. சந்தனம், பட்டு, கற்பூரம், வைரம் போன்றன இத்துறைமுகத்தில் வந்து இறங்கிய பொருட்களாகும்.

## பருத்தித்துறை

மாந்தையிலும் - யாழ்ப்பாணத்திலும் அன்று பருத்தி அதிகமாக விளைவிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தின் வட திசையில் இருந்த நகரத்துக்கு அன்று பருத்தித்துறை என்ற பெயர் இதனால்தான் வந்தது. [யாழ்ப்பாணச் சரித்திரம் - முதலியார் இராசநாயகம் - பக்கம் - 21[

## கதிரமலை

கதிரமலை என்று தமிழிலே அழைக்கப்படும் பெயர் சிங்களத்திலே ''கதிரகொட'' என்று அழைக்கப்பட்டது இது பறங்கிக்காரர் காலத்தில் ''கந்தர்குடை'. என்றும், ஒல்லாந்தர் காலத்தில் ''கந்தரோடை'' என்றும், ''ஓடைக்குறிச்சி'', என்றும் அழைக்கப்பட்டது.

எனினும் யாழ்ப்பாணத் தமிழரசர்களின் தலைநகரம் காலத்திற்குக்காலம் இடம் மாறியே வந்துள்ளது எனலாம். பழைய யாழ்ப்பாணத் தமிழரசு அனுராதபுரத்தை மையமாகக்கொண்டு ஆளப்பட்டதா? கந்தரோடையை மையமாகக் கொண்டு ஆளப்பட்டதா? சிங்கை நகரை மையமாகக்கொண்டு ஆளப்படாதா? என்ற கேள்விகளுக்கு விடையளிப்பதில் தர்க்க ரீதியாகச் சில சிக்கல்கள் இருந்தாலும் கூட, யாழ்ப்பாணத் தமிழரசு என்பது ஈழத்தின் ஒரு சிற்றரசுப்பகுதியாகவே இருந்து வந்துள்ளது. என்பதே உண்மை. ஆனால் இது பெரும்பாலும் யாருக்கும் அடங்காத சுதந்திரச் சிற்றரசே ஆகும். அந்த யாழ்ப்பாணத் தமிழரசின் தலைநகராக ஒருகாலத்தில் கதிரமலை என்று அழைக்கப்படும். கந்தரோடையும், 'சிங்கை நகர்' என்று அழைக்கப்படும் பகுதியும், பின்னர் பூநகரிப்பிரதேசத்தை மையமாகக் கொண்ட பகுதியும், இறுதியாக நல்லூரைத் தலைநகராகக்கொண்ட பகுதியுமே இருந்துள்ளன.

**மு. வே. யோ. வாஞ்சிநாதன்**

அனுராதபுரத்தை தலைநகராகக்கொண்டு அரசாட்சி செய்தவர்களுள் தமிழர்களும் உள்ளனர் - சிங்களவர்களும் உள்ளனர். அனுராதபுரத்தை விட பொலநறுவையும் ஈழத்தின் தலைநகரமாகச் சோழர் காலத்தின்பின் இருந்துள்ளது.

அனுராதபுரம், 'ஈழம்" முழுவதற்குமான மாபெரும் தலைநகராகப் பல நூற்றுண்டுகள் விளங்கிவந்துள்ளது. அனுராதபுரத்திலே பலசிறந்த தமிழரசர்களின் வரலாற்று முத்திரைகள் காலத்திற்குக் காலம் பொறிக்கப்பட்டு வந்துள்ளன... தமிழினத்தின் தலைவிதியை நிர்ணயித்ததில் அனுராதபுரமும் தனது பங்கைப் பூரணமாகச் செலுத்தியுள்ளது எனலாம் இன்றையத் தமிழர்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய இடங்களை உரிமை கொள்வதற்குரிய அத்தனை தகுதிகளும், அனுராதபுரத்தையும் பொலநறுவையையும் அதற்கு அப்பால் கூட உரிமைகொள்வதிலும் நியாயம் உண்டு என்று திடமாகக் கூறலாம். ஆயினும், தமிழர்கள் அனுராதபுரத்தைத் தவிர்த்து ஆட்சியுரிமை கேட்டுப் போராடுவதில் உள்ள பெருந்தன்மையை, பெரும்பான்மைச் சிங்கள இனம் புரிந்துகொள்ளாமல் இருப்பது விந்தையே.

[தொடரும்]

# அரசியற் தகவலுக்கென ஒரு தனி மலரின் தொடக்கம்

''மனிதன் தன் முகத்தையே நாள்விடாது கண்ணடியில் பார்க்கும் தேவை கொண்டவன்; தனது செல்வழி பற்றிமற்றவன் என்ன நினைக்கிறுன் என்பதை அறிவதில் மட்டற்ற அக்கறைகொண்டவன்'' என்று திரு. வே. பாலகுமாரன் நுணுக்குக்காட்டியை கடந்த வார ஈழநாதத்தில் அறிமுகம் செய்துள்ளார்.

மலரின் தலைப்பு : **நுணுக்குக்காட்டி**
(மாதாந்த மலர்)

வெளியீடு : **தமிழ்த்தாய்**

ஓவியங்கள் : **தயா**

இது ஒரு தகவல் யுகம். தகவலே ஒரு முதன்மைச்சக்தியாய் மாறிவிட்ட காலமிது. தகவற் கைத்தொழில், தகவற் பொருளாதாரம் தகவற் சமூகம் என அனைத்தும் தகவலின் பெயரால் அழைக்கப்படும் காலகட்டமிது. ''கடலை ஆழ்பவன் தரையை ஆழ்வான்'' என்று கூறப்பட்ட ஒரு காலகட்டம் இருந்தது. ஆனல் இப்போது தகவலை ஆழ்பவனே உலகை ஆழ்பவனுகிவிட்டான்.

வரலாற்றில் ஒவ்வொரு காலகட்டத்திற்குமென ஒவ்வொரு வலுப்பொருள்உண்டு. ஒரு காலத்தில் கல்லு வலுவாய் இருந்தது; அது கற்காலம் எனப்பட்டது, பின்பு இரும்பு வலுவாய் இருந்தது; அது இரும்புக்காலம் எனப்பட்டது. அதன்பின்பு கைத்தொழில் வலுவாய் அமைந்தபோது அது கைத்தொழிற் காலமென்றும் தற்போது தகவல் வலுவால் அமையும்போது அது தகவல் யுகம் என்றும் அழைக்கப்படுவதாயிற்று.

உலகில் நிகழும் அரசியல் நிகழ்வுகளை தேசவாரியாக அன்றைக்கன்றுடு ஆங்கிலத்தில் பதிவு செய்யும் ஓர் ஆவணமாக கீசிங்கின் சமகால அருஞ்சுவடு [Keesing's Contemporary Archives] எனும் ஏடு அமைந்துள்ளது. இது தினசரி நிகழ்வுகளை மாதாந்த வருடாந்தக் குறிகாட்டிகளுடன் ஆண்டுவாரிப் படுத்தப்பட்டதாய் அமைக்கப்பட்டுள்ளது. தினசரி நிகழ்வுகள் வாராந்தம் கைக்கெட்டும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அளவிற்கு மேற்குலகம் தகவற்சேகரிப்பில் மிக உன்னிப்பான கவனம் செலுத்தியுள்ளது.

தமிழில் மனோரம்மா போன்ற சில பொதுவான தகவல் நூல்கள் வெளிவருகின்றன. அதுவும் நுண்ணிய முறைகளை, இலகுபடுத்தப்பட்ட விஞ்ஞான அணுகுமுறைகளைக் கொண்டதாய் அமையவில்லை. மேலும் குறிப்பாக அரசியலுக்கு மட்டும் தனித்தகவலைக்கொண்டதாய் தமிழில் நூல் வடிவில் எதுவும் தொடர்ச்சியாய் வெளிவருவதில்லை.

தமிழில் நுணுக்குகக்காட்டி தான் அரசியலை மட்டும்தனித் தகவலாகக் கொண்டு வெளிவரும் முதலாவது மாதாந்த ஏடாக உள்ளது. இவ்வாறுன ஒரு முதலாவது ஏடு என்ற வகையில் இதற்கொரு தனி முக்கியத்துவம் உண்டு. ஆரம்பம் என்ற வகையில் அதற்கொரு சிறப்பும் ஆரம்பத்திற்கே உரிய இயல்பான பலவீனங்களும் இதில் உண்டு.

திரு. தயாவினுல் வரையப்பட்ட விந்தை ஓவியங்கள் (Cqricature) பல சிறப்பாக அமைந்துள்ளன. தகவலும் விந்தை ஓவியமும் ஒன்றிணையும்போது அதற்கொரு தனிக் கருத்துப்படிமம் ஏற்பட்டு விடுகிறது. இதில் இளமை குன்றுமலும், கருத்திற்குரிய உயிரோட்டம் தணியாமலும் பார்த்துக்கொள்வதில்தான் இதன் எதிர்காலச் செழுமை தங்கியுள்ளது.

வெறும் தகவல்களே ஆயினும் தகவல்கள் நிரைப்படுத்தப்படும்போது அவை கருத்துக்களைத் தாமாகவே உருவாக்கிவிடும் இயல்பு கொண்டவை. எனவே தகவல்களை நிரைப்படுத்துவதில் தனிச் சிறப்பான அக்கறை செலுத்த வேண்டியது அவசியம்.

ஓர் அரசியல்வாதி கூறும் நல்லதையும், கெட்டதையும், சாதகத்தையும் பாதகத்தையும் பதிவு செய்யவேண்டும். உதாரணமாக சந்திரிகா கூறும் பாதகத்தை மட்டும் தான் பதிவு செய்யவேண்டும் என்றில்லை. அவரது சாதகக் கருத்துக்களையும் பதிவு செய்ய வேண்டும். ஏனெனில் பாதகமான கருத்துக்களை மட்டுமே தொடர்ந்து கூறுபவரானல் அதில் அவரிடம் ஒரு நேர்மையுண்டு. ஆனல்சாதகத்தையும் பாதகத்தையும் மாறி மாறிச் சொல்பவரானல் அவரிடம் பித்தலாட்டமும் கள்ளத்தனமும் உண்டு என்பது தெளிவாகும்.

தகவல்களை ஆதாரப்படுத்துவதில் நுணுக்குக் காட்டி அக்கறை செலுத்தியுள்ளமை நல்ல விடயமாகும். அது ஆய்வுத்துறை சார்ந்தோருக்குப் பெரிதும் உதவக்கூடியது. ஆதாரப்படுத்தலில் மேலும் நுணுக்கமான கவனம்செலுத்தப்படவேண்டி உள்ளது. தகவல் நூல்கள் சமகால தேவை மட்டும் கொண்டவையல்ல, எதிர்காலப் பாவிப்பிற்கும் உரியவை.

**மு. திருநாவுக்கரசு**

குறைந்த மக்கள் தொகையைக்கொண்ட தமிழீழத்தவர் மத்தியில் நிறுவன பலம் அல்லது அரச பலம் உள்ளவர்களால்தான் இத்தகைய வெளியீடுகளைச் செய்ய முடியும். ஏனெனில் மக்கள் தொகை குறைவாய் இருக்குமிடத்து சந்தை வாய்ப்பும் குறைவானதாகவே இருக்கும். ஆனல் தமிழ்த்தாய்க்கு மேல் கூறப்பட்ட வகையான வளங்கள் உண்டு என்ற வகையில் வருவாய் நோக்கு நிலையைக் கடந்து சமூக நோக்கு நிலையில் இதனை வெளியிடுவது சாத்தியம். வருவாயைக் கருத்தில் எடுக்காது தளத்தைப் பெரிதாக்கி ஏட்டினை மேலும் விரிவாக வெளியிடக் கூடிய வளர்ச்சியை இது எட்டுதல் நலம்.

தகவற் சமூகத்தில் உலகத்துடன் போட்டியிட்டு முன்னேற மேலும் பல்துறை சார்ந்த பல தகவல் நூல்கள் தமிழில் வெளிவரவேண்டும்.

## நேர் காணல்

கேள்வி:

நீங்கள் எப்பொழுது எவ்வாறு எழுத்துத் துறையில் பிரவேசித்தீர்கள்?

# நிகழ்காலச் சவால்களை எழுதுவதே
# நிலைத்து வாழும் படைப்பாகும்

**- சொக்கன்**

பதில்:

1944இல் எனது முதற்கதை 'தியாகம்' வீரகேசரி வாரமலரில் அது வெளியாயிற்று. எனக்கு மூத்தோரான உறவினர்கள் கதைப் பிரியர்கள். ஆனந்தவிகடன், நாரதர் (திரைப்பட சஞ்சிகை), கல்கி, கலைமகள், பிரசண்டவிகடன் முதலாம் தமிழகத்துச் சஞ்சிகைகள், வீரகேசரி, தினகரன், ஈழகேசரி ஆகிய இலங்கைப் பத்திரிகைகதைகள் என்பன எனக்கு எழுதவேண்டும் என்ற உந்துதலை அளித்தன. எழுதினேன், முதற்கதையே வெளியான உற்சாகம். மதுரகவி நாகராஜன், இராஜகோபாலன் (புரட்சிதாசன்) போன்ற நண்பர்களின் தூண்டுதல்கள், பாராட்டுக்கள் யாவும் சேர்ந்து என்னை எழுதவைத்தன.

கேள்வி:

நீங்கள் எழுதிய ஆக்கங்கள், தமிழ் நாட்டிலும்' இலங்கையிலும் வெளியான நாவல், சிறுகதைகள், கட்டுரைகள், பாரதம், இராமாயணம், விக்கிரமாதித்தன் களில் சிறந்தது என எதைக் கருதுகிறீகள்?

பதில்:

'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்ற தத்துவத்தை எழுத்தாளன் சிக்கெனப் பிடிப்பது தவறு என்ற கொள்கையுடையவன் நான். எனது அரை நூற்றுண்டு எழுத்தனுபவத்தில் நான் எழுதிய பலவற்றையும் நானே சுயவிமர்சனம் செய்து குறைகளைக் கூறவும் எழுதவும் தயங்கியதில்லை. எனது சுயவிமர்சனத்தையும் தப்பிப் பிழைத்த சில சிறுகதைகள், ஓரிருநாவல்கள், நாடகங்கள்

சந்திப்பு:
மணிசேகரன்

(7ம் பக்கம் பார்க்க)

நல்லூர் ... நூலகம்

சிறுகதை

# பரிதவிப்பு

மலரன்னை

அன்று பௌர்ணமி பால் நிலா பரந்த வானில் பவனி வந்துகொண்டிருந்தது. கருமேகங்கள் கூட்டம் கூட்டமாக அணிதிரண்டு நிலவுடன் கண்ணாமூச்சி விளையாட்டில் ஈடுபட்டிருந்தன.

பார்வதி நித்திராதேவியினால் முற்றாக நிராகரிக்கப்பட்ட நிலையில் படுக்கையில் புரண்டு படுத்தாள். பக்கவாட்டில் புரண்டு படுத்தவளது கைகளில் பட்டுப் போன்றதொரு மெல்லிய ஸ்பரிசம்...

அவளது மேனி ஒரு தரம் சிலிர்த்துக்கொண்டது. உணர்வலைகள் அவளது இதயத்தை ஊடுருவியபோது......

பார்வதியின் நெஞ்சத்துள் பாறாங்கல்லொன்று புகுந்துவிட்டாற்போன்ற பிரமை. தொண்டைக்குள் ஏதோ தொக்கலாய் அடைத்து அவளை மெல்லவும் விடாது விழுங்கவும் முடியாதவாறு சித்திரவதை செய்தது.

மெல்லிய கேவலாய் விசும்பல் ஒன்று. வெளிப்பட்டு, வெளிக்காற்றுடன் சங்கமமாகிய வேளை, அவளருகிற் கிடந்த குழந்தை தூக்கம் கலைந்து சிணுங்கத் தொடங்கியது.

''ம்மா!...ம்...மா!......''

பார்வதி குழந்தையைத் தன்னுடன் சேர்த்து அணைத்துக்கொண்டாள். பசித்த குழந்தை தன் உதடுகளை அசைத்து உணவைத் தேடியது. அவள் அவசரமாகத் தன் தலைமாட்டில் வைத்திருந்த சூப்பியை எடுத்து அதன் வாயினுள் திணித்தாள்.

சூப்பியை உமிழ்ந்தவாறே குழந்தை உறக்கத்தில் ஆழ்ந்தது. பச்சிளம்பாலனை ஏமாற்றியதை எண்ணிப் பார்வதி பெரும் பரிதவிப்புக்குள்ளானாள். அவளது கண்முன்னே... அவளது ஆசை மகள் அமுதாவின் உருக்குலைந்த சிதைந்த சடலம் பாதுகாப்புத் தேடி தேவாலயத்துள் நுழைந்தவள், புக்காரா போட்ட குண்டினால் சக்கையாகி பார்வதிக்கொரு பாரத்தையும் விட்டுப் போய்விட்டாள்.

தெய்வாதீனமாக அமுதாவின் குழந்தை அருணன், எப்படியோ இடிபாடுகளுக்கிடையே கிடந்து உயிர் தப்பிவிட்டான்.

தாயையும், தந்தையையும் ஒன்றாகவே இழந்துவிட்ட அந்தப் பாலகன் பார்வதியின் அரவணைப்பில் வளரவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியது. சோர்வுற்ற நிலையிலும் பார்வதி பேரனை வளர்த்து ஆளாக்கிவிட வேண்டுமெனக் கங்கணம் கட்டிக்கொண்டாள்.

''ம்!...எல்லாம் என்னால் வந்த வினைதான்''

அவளது மனம் சொல்லிக்கொண்டது. அன்று மாலை நடந்த நிகழ்வுகள் அவளது மனதை ஆக்கிரமித்துக்கொண்டன,

வீட்டு விறாந்தையில் வைத்துப் பார்வதி பேரனுக்குப் புட்டிப்பாலைப் புகட்டிக்கொண்டிருந்தாள்.

''கிறீச்!...''

படலை திறக்கும் சத்தம் கேட்டுத் தலை நிமிர்ந்த போது...சைக்கிளை உருட்டியவாறே இருவர் வந்துகொண்டிருந்தனர்.

யாரோ துக்கம் விசாரிக்க வந்தவர்களாக்கும் என எண்ணியவளாய் பார்வதி மௌனத்தைத் தழுவிக்கொண்டாள். வந்தவர்கள் அவள் முன்னால் வந்து அமர்ந்துகொண்டனர். இப்போதும் பார்வதிக்கு அவர்களை அடையாளம் காண முடியவில்லை.

''மாமி! என்ன பேசாமல் இருக்கிறீயள்?''

பரிச்சயமான அந்தக் குரல் பார்வதியை ஒரு கணம் நிலை தடுமாற வைத்தது. மறுகணமே தன் நிலை வரப்பெற்றவளாய்ப் பெருங்குரலெடுத்து அழத் தொடங்கினாள்.

''ஐயோ! மாலதி. அமுதாவை நான் பறி கொடுத்திட்டன்.''

மாலதியும், அமுதாவும் இணைபிரியாத தோழிகள். இருவரும் ஒரே வகுப்பில் படித்துக்கொண்டிருந்தமையால் அவர்களின் நெருக்கம் மேலும் வளர்ந்தது. இருந்தாற்போல் ஒரு நாள் மாலதியைக் காணவில்லையென அவளது தந்தை தேடிக்கொண்டு பார்வதியின் வீட்டிற்கு வந்தபோதுதான் அவளது மூளையில் பொறி தட்டியது. அன்றே திடசங்கற்பம் பூண்டுவிட்டாள். விளைவு......

அடுத்த வருடம் அமுதாவின் கைகளில் குழந்தை,

மாலதியின் கரங்களில் ஆயுதம். ஆம்! மாலதி ஆதிக்க வெறியருடன் ஆக்ரோசத்துடன் மோதிக்கொண்டிருக்கிறாள்.

பார்வதியின் அழுகை ஓயுமட்டும் காத்திருந்தாள் மாலதி. எழுந்து அவளருகில் வந்தவள், குழந்தையின் முகத்தை உன்னிப்பாகப் பார்த்துவிட்டு, ''சரியாய் அமுதாவைப் போலத்தான்'' சொல்லிக்கொண்டே குழந்தையின் கன்னத்தில் லேசாகத் தட்டினாள்.

குழந்தை அவளைப் பார்த்துச் சிரித்தது.

மாலதி, ஆதரவுடன் பார்வதியின் தோள்களைப் பற்றினாள்.

''மாமி! கவலைப்படாதையுங்கோ. அவசரமாக ஒரு இடத்துக்குப் போகவேணும். போட்டுவரட்டே''

மாலதியின் வலிமையேறிய கரங்கள் அவளது மேனியில் பட்டதும் பார்வதிக்கு இனம் புரியாத ஒரு தென்பு பிறந்தது. அவளது கைகளைப் பற்றியவள் திடுக்கிட்டுப் போனாள்.

''என்ன பிள்ளை? என்ன நடந்தது?''

சிரித்துக்கொண்டே மாலதி பெருமையுடன் கூறினாள்.

''மாமி! அது புலிப்பாய்ச்சல் நடவடிக்கையில் இராணுவத்தின்ரை துப்பாக்கி ரவை பட்டு என்ரை கைவிரல்கள் இரண்டும் சிதறிப் போச்சு.''

மாலதியின் சிரிப்பொலி பார்வதியின் மனதைக் குடைந்து, அவளுக்கு எதையெதையோ அறிவுறுத்திக் கொண்டிருப்பதாக அவளுக்குப் பட்டது.

மாலதி போய்விட்டாள்.

அவள் மீட்டிவிட்டுப்போன தாகம் பார்வதியின் இதையத்தைக் குடைந்து, பரிதவிப்பை ஏற்படுத்த நித்திராதேவி அவளை அணுக மறுத்தாள்.

பார்வதி சாளரத்தினூடே பார்வையைப் படரவிட்டாள்.

அங்கே...முழு நிலவை மறைத்திருந்த கருமேகங்கள் விலகிப் பஞ்சுப் பொதிகளாக வெண் முகில்கள் நிலவை முத்தமிட்டுக்கொண்டிருந்தன. (முற்றும்)

## கவிமலர்

### பட்டினியால் பணியமாட்டோம்...

நிறைவேற்று - அதிகாரக்
குடையின் - கீழ்
அதி உத்தம
பதவி - உள்ள -
அம்மா (வே)
சந்திரிகாவே[ா]!
ஃ ஃ
இப்போ - ஏன்
அம்மா -
குடா நாட்டு - மக்களை
மாவைப் - பார்த்து
வாயைப் - பிளக்க
வைக்கிறாய்!
பாணுக்காகவும்
கடை வாசலில்
காவலுக்கு -
நிறுத்துகின்றாய்
ஃ ஃ
உன் -
அம்மாவின் ஆட்சியிலும்
அப்படித்தானும் -
என்று - என்
பாட்டியும் - பாட்டனும்
சொல்லுகின்றார்கள்.
ஃ ஃ
மாவை - நிறுத்தி
மீதி - உள்ளவர்களை -
பட்டினியால்
பணிய வைக்கலாம்-
என்பது - உன்
பகல் - கனவு
அம்மா - இது
இப்பாரினில் - நடக்காது
எங்கள் - வரலாற்றைப்
முன்நோக்கிப் - பார்
முன் நோக்கிப் - பாயாதே!
ஃ ஃ
மரணத்துக்கு - மேலாக
நாங்கள் - மதிப்பது
தூய - விடுதலையை
இதற்காக - சாவையே
தூசாக கொண்டோம்!
ஃ ஃ
சாவின் - மூலம்
சரித்திரம் - படைப்போம்
ஜனநாயக - ஆட்சியின்
அநியாயம் - அழிப்போம்
தமிழ் தலைவன்
எம் - தம்பி -
தலைமையில் - புதுச்
சரித்திரம் - படைப்போம்
உரிமைகள் பெறுவோம்,
ஃ ஃ
குட்டக் - குட்டக்
குனிபவன் - அல்லவே!
தமிழன் -
பதுங்கிப் - பின்
புலிப்பாய்ச்சல் -
பாய்வபன் - தான்
தமிழன்

- மந்துவிலூர் சிவா.

உண்மைச்சம்பவம்

கடற்படையினரால்

# ஓரிரு நிமிடங்களில், ஐந்து இளம் பெண்கள் விதவைகளாயினர்

1994 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18-ந் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 6 மணியளவில் முல்லைத்தீவுப் பக்கமிருந்து வந்த கடற்படை பீரங்கிப் படகொன்று தொடுவாய் வாய்க்கால் கடற்பரப்பில் கரைக்கு மிக அண்மையில் கட்டுமரங்களில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த வேளை கடற்றொழிலாளர்கள் மீது கண்டபடி துப்பாக்கிப் பீரங்கி வேட்டுகளை மாறி மாறி தீர்க்கின்றது. ஓரிரு நிமிடங்களில் பத்து பேரின் உயிர்கள் அவ்விடத்திலேயே பிரிந்தன.

கட்டைக்காடு - வெற்றிலைக் கேணி இராணுவ நடவடிக்கை காரணமாக 1991-ம்ஆண்டுஆடிமாதம்14ந் திகதியன்று இடம்பெயர்ந்த கட்டைக்காடு கிராம மக்கள் இராணுவ முகாமிலிருந்து 5 மைல் தூரத்திலுள்ள தொடுவாய் வாய்க்கால், பூனைத்தொடுவாய், சுண்டிக்குளம் கடற்கரை ஓரக் கிராமங்களில் தற்காலிக குடிசைகள் அமைத்து சுமார் 150 வரையான கடற்றொழிலாளர் குடும்பங்கள் வசித்து வருகின்றன. இக்குடும்பங்களில் இருந்து கடலுக்குச் சென்ற பத்துப் பேரே உயிர் துறந்தனர்

சம்பவம் நடைபெற்ற தினம் அதிகாலை கடலுக்குச் சென்று கடலில் வலையை விரித்தபின் சில மணி நேரத்தில் தமக்கு நடக்கப் போவதை அறியாது சற்று உறக்கத்தில் ஆழ்ந்திருந்த வேளை அதிகாலை 6 மணி போல் கரையிலிருந்து விசில் சத்தம் கேட்கிறது. திடுக்கிட்டு விழித்தவர்கள் கடலை அவதானித்த வேளை முல்லைத்தீவுப்பக்கமிருந்து கரும்புள்ளி போன்றதொன்று தெரிவதைக் கண்டு அது கடற்படை பீரங்கிப் படகு தான் என எண்ணி கட்டுமரத்தில் பிணைத்திருந்த வலைகளை அவிழ்த்துவிட்டு அனைத்து கட்டுமரங்களிலும் இருந்தவர்களும் கரையை நோக்கி சவள் பலகையால் மிக வேகமாக வலிக்கின்றனர். ஆனால் அவர்கள் நினைத்ததுபோலல்லாமல் ஓரிரு நிமிடங்களில் பீரங்கிப் படகு இவர்களுக்குக் கிட்ட நெருங்கி வந்து துப்பாக்கி, பீரங்கி வேட்டுகளை மாறி மாறி தீர்க்கின்றது. ஐந்து கட்டுமரங்களும் அவைகளிலிருந்த பத்துப் பேரும் பீரங்கிப் படகிற்கு மிகக் கிட்டிய தூரத்தில் அகப்பட்டுக் கொள்கின்றனர். மற்றைய கட்டுமரங்களில் இருந்தவர்கள் மிகுந்த சிரமத்துடன் கரையை அண்மித்து கடலில் நடப்பதை அவதானிக்கின்றனர். தப்பிவந்தவர்களில் யார் யார் வந்துள்ளார்கள் என கரையிலிருந்தோர் பார்த்து கரை சேராதவர்களின் உறவினர்கள் கத்தி அழுகின்றனர்.

இந்நேரத்தில் துப்பாக்கி வேட்டுச் சத்தம் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறது. கடற்கரையில் நின்றிருந்த தொடுவாய் வாய்க்கால் கிராம மக்கள் முழுப்பேரும் இறந்தவர்களின் மனைவியர், குழந்தைகள், பெற்றோர், சகோதரர், உறவினர் அகப்பட்டவர்களுக்கு என்ன நடக்கப்போகிறது என்பதை அவதானித்தவண்ணம் ஆண்டவனை பிரார்த்தித்தனர்.

கட்டுமரத்தில் நின்ற பத்துப் பேரும் எழுந்து நின்றும் கட்டுமரத்திலேயே முழங்காலில் இருந்தும் தங்களை சுட வேண்டாம் என கும்பிட்ட வேளையில் கடற்படையினரின் துப்பாக்கிச் சூடுபட்டு அந்தோனிப்பிள்ளை இயக்கோப்பிள்ளை அவரின் மகன் நிக்‌ஷன் ஆகியோர் கடலில் விழுகின்றனர். தொடர்ந்தும் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்படுகின்றன.சகோதரர்களான யேசுராசா சாந்தகுமார், யேசுராசா ஜெயறஞ்சன் ஆகியோரும் அவர்களைத் தொடர்ந்து அமிர்தநாயகம் யோண் பெர்னாண்டோ, கபிரியேல்பிள்ளை யேசுதாஸ், ஆசீர்வாதம் வில்சேந்தி மருசலீன், மனுவேற்பிள்ளை மரியசீலன், கபிரியேற்பிள்ளை அருள்ஞானசீலன், சிவகிருபைலிங்கம் கணேசலிங்கம் ஆகியோர் சூடுபட்டு விழுகின்றனர். கடற்படை பீரங்கிப்படகு தமது நாடகத்தை நடாத்தி முடித்தபின் கடலில் நின்ற கட்டுமரங்களை ஒரு தடவை சுற்றிப் பார்த்துவிட்டு மேற்குப் பக்கமாக கட்டைக்காடு வெற்றிலைக்கேணி இராணுவ முகாமை நோக்கி செல்லுகிறது. கடற்கரையில் ஊரே கூடிவிட்டது. எங்கும் மரண ஓலமும் ஒப்பாரியும் ஓரிரு நிமிடங்களில் 5 இளம் பெண்கள் விதவையாக்கப்பட்டனர். பல குழந்தைகள் தந்தையரை இழந்தனர். பெற்றோர் பிள்ளைகளைப் பிரிந்தனர். பீரங்கிப் படகு சென்று சுமார்5நிமிடங்கள் சென்றிருக்கும் கரையிலிருந்து கட்டுமரங்களில் சம்பவம் நடைபெற்ற கடற்பகுதிக்கு சென்றவர்கள் கட்டுமரங்களில் உயிரற்று வயிறு பிளந்த நிலையில் கிடந்த அமிர்தநாயகம் யோண் பெர்னாண்டோ. யேசுராசா சாந்தகுமார் ஆகியோரின் உயிரற்ற உடல்களை கரைக்குக் கொண்டு வந்து சேர்க்கின்றனர். மற்றைய எட்டுப் பேரினது உடல்களும் கடல் நீருள் அமிழ்ந்து போய்விட்டன. இருவரினது ஈமக்கிரியைகளும் அன்று மாலையே நடைபெறுகின்றது.

மற்றைய எட்டுப் பேரினது சடலங்களை கடலிலும், கரையிலும் தேடும் பணி இரவு பகலாக நடைபெறுகிறது. மறுநாள் 19-ந் திகதி சனிக்கிழமை மாலை 4 மணியளவில் முதலாவது சடலம் கடல் நீரில் மிதக்கிறது. அதனைத் தொடர்ந்து இரவு 9 மணிக்கிடையில் 7 சடலங்கள் அடையாளம் காண முடியாத நிலையில் கரையொதுங்குகிறது. ஒரு சடலம் மட்டும் கரை ஒதுங்காது நீரோட்டத்துடன் இழுபட்டு கட்டைக்காடு-வெற்றிலைக்கேணி இராணுவ

[7-ம் பக்கம் பார்க்க]

தொகுப்பு: அ. ஸ்ரனிஸ்லாஸ்
[தாளையடி செய்தியாளர்]




## காளிக்கு அளித்தவாக்கு 3

சோமவேதிகை என்ற நகரில் நீதிவம்சகேது என்ஞெரு மன்னன் செங்கோல் செலுத்திவந்தான். நாடு சுபிட்சமாக இருக்கவேண்டி அவன்தன் குருதெய்வமாகிய பத்திரகாளிக்கு பெரியதொரு கோவில்கட்டி விமரிசையாக உற்சவம்நடத்திஞன். அதைக் காண எங்கெல்லாமிருந்தோ ஏராளமான பக்தர்கள் வந்திருந்தார்கள்.

இப்படி வந்தவர்களில் ஒரு வாலிபன் ஒரு பெண்ணைக் கண்டு அவள் அழகில் மயங்கி விட்டான். பிறகு அவன் பத்திரகாளி சன்னிதியில் போய் தாயே! அந்தப் பெண்ணை மணக்கவேண்டும். நீதான் என் கோரிக்கையை ஈடேற்றவேண்டும். அப்படிச் செய்தால் என்தலையைவெட்டி உன் காலடியில் சமர்ப்பிக்கின்றேன் என்று வேண்டிக் கொண்டான்.

அப்பால் அவன் தன் தாய் தந்தையரிடம் விருப்பத்தைக் கூறி அதனைச் செய்து வைக்குமாறு வேண்டினுன்.

ஒரேமகனுகையால்பெற்றேர் களும் மகனது விருப்பத்தை நிறைவேற்றிவைப்பதாக வாக்குறுதியளித்து பெண்ணின் தந்தையைப் போய்ப்பார்த்து வந்தார்கள். பெண்கேட்டு வந்தவர்கள் தங்கள் குலத்தைச் சேர்ந்தவர்கள் என பெண்ணின் பெற்றேர்கள் மகிழ்ந்து இணக்கம் தெரிவித்தனர். மகன் விரும்பியபடியே விரும்பியபெண்ணுக்கு திருமணம் நிறைவு பெற்றது.

தன்விருப்பம் இவ்வளவு எளிதில் நிறைவேறுமென்று வாலிபன் எண்ணவில்லை கொஞ்ச நாள் தன்மனைவியுடன் இன்பமாகக் காலம் கழித்துவந்தான். இதற்குள் பெண்ணின் பெற்றேர் அங்கிருந்து ஊர்போய்ச்சேர்ந்தார்கள் சில நாள் கழித்துப்பெண்ணின் தந்தை தன்மகனை அங்கே அனுப்பி மகளையும் மருமகனையும் அழைத்துவரச் சொன்ஞர். அப்படியே அவன் அவர்களை அழைத்துக் கொண்டுவரும்போது வழியில் பழைய பத்திரகாளியின் கோயில் அருகில் தங்கிஞர்கள்.

அப்போதுதான் வாலிபனுக்கு தான் பத்திரகாளி முன் செய்த சபதம் நினைவுக்குவந்தது. அவன் தனது மைத்துனனையும் மனைவியையும் குளக்கரையில் இருக்கச்சொல்லிவிட்டு தான் மட்டும் கோயிலுக்குள் நுழைந்தான்.

''தாயே, நான் செய்து கொண்ட சபதத்தைமறந்து விட்டேன், கோபித்துக்கொள்ளாமல் பொறுத்துக்கொள்'' என தன்கையில் இருந்த வாளால் கழுத்தை வெட்டிக் கொண்டான். வெகுநேரமாகியும் அவன் திரும்பிவராததால் பெண்ணின்தம்பி அக்கா நீ இங்கிருந்துகொள் நான் போய்பார்த்து வருகிறேன்'' என்று கோயிலுக்கு சென்ருன் அங்கே அத்தான் தலைவேறு உடல்வேருக கிடப்பதைக் கண்டு இந்தகண்ருவியை எப்படி அக்காவிடம் சொல்வேன் எனமனமுடைந்தான். செய்வதறியாது தானும் கையில் இருந்தவாளால் கழுத்தை வெட்டிக்கொண்டு அந்தஇடத்திலே இறந்தான்.

தன்னந்தனியாக இருந்த அவளோ இருவரையும் காணுது தவித்துவிட்டு தானே கோயிலுக்குள் வந்து பார்த்

ஈழமாமா

தாள். இக்கோரக்காட்சியைப் பார்த்ததும் செய்வதறியாது திகைத்தாள். சீ இனி நான் இருந்து என்னபயனென உலகைவெறுத்து அந்தவாளால் சுழுத்தை வெட்டப் போஞள்,

அப்போது காளி அவள்முன் தோன்றி அப்படிச்செய்யாதே என்றது. அவளோ என் கணவரையும் தம்பியையும் எழுப்பித்தந்தால் அப்படிச்செய்யாமல் இருப்பேன்'' என்ருள்.

சரி அப்படியே இருவர் தலையையும் உடலையும் ஒன்று சேர் இருவரும் உயிர் பிழைப்பார்கள்' என்று அருள்பாலித்தாள். பெண்ணே அவசரத்தில் கணவரின் தலையை தம்பியின் உடலுடனும், தம்பியின் தலையைகணவனின் உடலுடனும் சேர்த்துவிட்டாள். உயிர்பெற்ற பின்னர் தான் அவளுக்கு தனது தவறு புரிந்தது இனியாரை கணவனுகவும் யாரைத் தம்பியாகவும் கருதுவதுஎன்று ஏக்கமுற்ருள்.

அப்போது இக்கதையைச் சொன்ன வேதாளம், இப்போது அவள் என்ன செய்தால் நல்லதுயாரைக் கணவனுக கொள்வது என்று விக்கிரமினைக் கேட்டது.

விக்கிரமினும் இவர்களில் எவன் அவளைத் தன் மனைவி என்று அழைக்கிருனே அவனுக்கே அவள் பத்தினியாகவேண்டும், தலையே அங்கங்களிளெல்லாம் சிறந்தது. ஆகவே அதை முக்கியமாகக் கொண்டுதான் இந்தப்பிரச்னையைத் தீர்க்கவேண்டுமென பதிலளித்து சென்ருன்.

[அடுத்தவாரம் இளவரசியின் தயக்கம்]

## வண்டி இழுக்கும் மனிதன்

வறுமையின் வட்டத்தில்
வாடிவதங்கும் ஏழைத்தமிழன்
மாடிழுக்கும் வண்டியை — தன்
மனித சக்தியிஞல் இழுக்கிருன்
குடும்பத்தில் சுமைதாங்கியாய்
குறுக்கு வழியில் செல்லாமல்
நேர்மையின் சின்னமாக
நேர்வழியில் உழைக்கின்ருன்.

—நிலாமகன்

# சத்தியபாமா நரகாசுரனேடு

## போரிட்டுசிறைவைத்தபெண்களைமீட்டெடுத்த

# தீபாவளித் திருப்பண்டிகை

இறைவனைச் சோதிவடிவானவன் என்று சொல்வார்கள். 'ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் சோதி' என்பது திருவாசகம். உலகம் இயல்பாகவே இருள்மயமானது. ''மாயுருள் ஞாலம்'' என்று திருமுருகாற்றுப்படை கூறுகின்றது. இதற்கு ஒளியூட்டும் பொருட்களைப் புலப்படச் செய்கின்றவை சூரியன், சந்திரன் என்னும் சுடர்கள் பரஞ்சோதியாகிய இறைவனே சூரியனுக்கு ஒளி தருகின்ருன். அந்தச் சூரியன் சந்திரனுக்கு ஒளி தருகின்ருன்.

உலகம் ஒளியினுல் நலம் பெறவேண்டுமென்று சூரிய சந்திரர்கள் தோன்றிஞர்கள்.

ஸச்சி

ஆனுல் அவர்களை நம் விருப்பப்படி வேண்டிய காலத்தில் வேண்டிய இடத்திலும் தோன்றச்செய்ய முடியாது. அவை தமக்கு அமைந்த நியதிப்படியே ஒளி தருகின்றன,

ஆனுல் விளக்கு அத்தகையதன்று நம்முடைய விருப்பப்படி வேண்டிய காலத்தில் வேண்டிய இடத்தில் ஏற்றி வைக்க முடியும். அவ்வாறு ஏற்றிவைப்பதனுல் விளக்கு நமக்கு சக்திக்கு அகப்பட்டது என்று சொல்ல முடியாது. அகலும் எண்ணெயும் திரியுமே நம்மால் சேர்த்து வைப்பதற்குரியது. விளக்காக எரியும் சுடர் தெய்வ சக்தியினுல் ஒளிர்கின்றது. அதையே தெய்வத்தின் திருவுருவாக வழிபடுவது வழக்கம்.

''தீபமங்கள சோதி நமோ நமோ'' என்று பாடுகிருர் அருணகிரிநாதர். ''சோதியே சுடரே சூழ்தளிவிளக்கே'' என்பது திருவாசகம். கண்ணுக்கு தெரியாத சோதியாக இருக்கிறதோ அதுவே சுடர்களாக ஒளி விடுகின்றது. அதுவே விளக்காகவும் விளங்குகின்றது.

இந்த உண்மையை நன்கு பார்த்தவர்கள் தீபத்தை இறைவனின் பிரதிநிதியாக நினைத்தார்கள். தீபலக்ஷ்மி என்று சொன்ஞர்கள். மாலையில் சுமங்கலிகள் விளக்கேற்றித் தொழுதார்கள். விளக்கின் பெருமையைக் காட்டுவது தீபாவளியாகிய ஒளித்திருநாள். தீபாவளி என்பதற்கு விளக்கின் வரிசை என்பது பொருள். இந்த வழக்கமே வீடு முழுவதும் விளக்கேற்றி வணங்கும் திருநாள் தீபாவளி. தீப வணக்கத்திற்காகவே அமைந்த திருநாள் தீபாவளி.

தீபாவளியை நரகசதுர்த்தி என்று சொல்வார்கள். நரகாசூரன் வதமான நாள் அது. நரகாசூரன் தன் கோட்டைக்குள் பல மகளிரைக் கொண்டு வந்து அடைத்து வைத்திருந்தான். இந்தக் கொடுமையை தேவர்கள் கண்ணபிரானிடம் முறையிட்டார்கள்.

கண்ணன் சத்தியபாமாவுடன் கருடவாகனத்தில் ஏறிப் புறப்பட்டான் நரகாசூரன் உள்ள இடத்திற்கு வந்து போர் புரிந்தான். சத்தியபாமாவே கையில் வில்லும், அம்பும் ஏந்திப் போரிட்டாள். அவசியம் நேரிடும்போது பெண்மையிலும் ஆண்மை தோன்றும் என்பதை நினைவூட்டியது.

சத்தியபாமா நரகாசூரனேடு போரிட்டு அவனை அழித்தாள். அவன் கோட்டையில் சிறைப்படுத்திய பெண்களை எல்லாம் விடுவித்தாள். இதனுல் தீபாவளிப் பண்டிகை ''பெண் விடுதலை'' பெற்ற திருநாளாகும்.

## தெரிந்து கொள்ளுங்கள்

1. உலகில் மிகச்சிறிய ெதசியகீதம் உள்ள நாடு?
   யப்பான் - 4 வரிகள்.
2. உலகில் மிக நீளமான தேசியகீதம் உள்ள நாடு?
   கிரேக்கம் - 128 வரிகள்.
3. உலகப் புகழ்பெற்ற ஆங்கில நாடக ஆசிரியர்?
   வில்லியம் ஷேக்ஸ்பியர்.
4. உலகில் உள்ள மிகப் பெரிய அனைத்துலக விமானத்தளம் உள்ள நாடு?
   சவுதிஅரேபியா.
5. உலகிலேயே இந்து மதத்தை ஆட்சிமதமாகக்கொண்ட ஒரே ஒரு நாடு?
   நேபாளம்.

தர்மராசா சிறீனிவாசன்
ஆண்டு-9
ஹாட்லிக் கல்லூரி
பருத்தித்துறை.

## விடுகதைகள்

1. அழுத்தி அழுத்தி மிதித்தால் அலறித்துடித்து ஒடும் அது என்ன?
   சைக்கிள்.
2. ஆள் ஏருத மலையில் ஆயிரம் பூப் பூத்திருக்கும் அது என்ன?
   நட்சத்திரம்.
3. நீரில் பிறந்து நீரில் மறைவான் அது என்ன?
   உப்பு.
4. அம்மாவிற்கு 32பிள்ளைகள் அது என்ன?
   பற்கள்.
5. வீரன் காக்கிச் சட்டை அணியமாட்டான் அது என்ன?
   நாய்.

பல்சுவை

## மணப்பெண்ணுக்கு 85 கசையடிகள் மணமகனுக்கு ஒரு கோடி ரூபா அபராதம்

ஈரானில் கடந்த வாரம் இடம்பெற்ற வழக்கொன்றில் திருமணப் பெண்ணுக்கு 85 கசையடி வழங்க இஸ்லாமிய நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. ஈரானில் இஸ்லாமிய மதக் கோட்பாட்டுக்கமைய திருமண வைபவங்களில் கேளிக்கைகளும், ஆடல்பாடல்களும் தடை செய்யப்பட்டிருக்கும்போது இம்மணப்பெண் தன் திருமண நிகழ்வின்போது மேற்குலக கலாச்சாரத்துக்கமைய ஆடிப்பாடி கேளிக்கைகளில் பங்கு கொண்டதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இவ்வழக்கை விசாரித்த நீதிபதிகள் மணப்பெண் செய்த குற்றத்திற்காக 85 கசையடிகள் வழங்கவும். மணமகனுக்கு ஒரு கோடி ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கிஞர். இதைவிட இவ்விழாவில் கலந்துகொண்ட 125 விருந்தினருக்கும் அபராதம் விதிக்கப்பட்டது.

# ஜேர்மனியில் தமிழர்கள்

## கள்ளத்தமிழன் என

# நாஜிகளால் வர்ணிப்பு

''தேள்ளாடிய படியே நான் இங்குவருகையில் யாரது வீட்டு வாசலில் நிற்பது?, வீடு தேடும் கள்ளத் தமிழன் ஒருவன்'' என்ற பாடல் அடிகளை ஜேர்மனியில் உள்ள நாஜிகள் தங்கள் தேர்தல் சுலோகங்களாகப் பாவித்தார்கள்.

ஆனுல் அகதிகளாக ஜேர்மனிக்குப் போகும் தமிழர்கள் படும் இன்னல்களோ ஏராளம். பெரும்பாலான தமிழர்கள் அகதி முகாம்களில் தான் வாழுகின்ருர்கள்.

அகதிமுகாம்களில் 100பேருக்கு ஒரு மலசல கூடம் ஒரு சமையல்அறை. அறைகளில் வெவ்வேறு நாட்டவர்களும் வெவ்வேறு மதத்தினரும்வாழ்கின்றனர். தனிமை அனுபவிப்பு, மோதல் ஏற்படல். தாயக நினைவு பெருகுதல் போன்ற பல உளவியல் தாக்கங்களும் உள்ளாகின்றன.

குடும்ப நிலையில் வாழ்க்கைச் செலவு பன்மடங்கு அதிகரிப்பு இலங்கையைவிட 25 மடங்கு அதிகரித்த செலவு ஜேர்மனியில் உள்ளது, கடினஉழைப்பு கணவன்மனைவி உழைப்பு, குடும்பவாழ்க்கை பாதிப்பு, கடனுல் தற்கொலைஅதிகரிப்பு, அதிக குடி, வீண்சந்தேகம் போன்ற நிகழ்வுகளும் இடம் பெறுகின்றன.

இளைஞர்கள் மத்தியில் பண்பாட்டுச் சீரழிவு, போதைவஸ்துக் கடத்தல், விபசார விடுதிகளை நாடல், திருடல் போன்ற சம்பவங்கள் இடம் பெறுகின்றன.

இருந்தபோதிலும் நம் தமிழர்கள் புகலிட நாடுகளில் சாதி, மரபுகளைப் பேணல், சீதனம்வாங்கும்முறை,சீட்டுப் பிடிக்கும் பழக்கம் கோஷ்டி மோதல், வீண் ஆடம்பரங்களில் நாட்டம், பிறந்தநாள் விழா, பூப்புனித நீராட்டு விழா போன்ற சடங்குகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

ஜேர்மனியில் தமிழர்களின் கஷ்டமான வாழ்க்கையை ஜேர்மனியில் உள்ள அ. கந்தசாமி 'அகதி' என்ற தலைப்பில் கவிதையாகவடித்துள்ளார்.

(7ம் பக்கம் பார்க்க)

நூலகம்,



## நிகழ்காலச்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கு நிறைவு தந்திருக்கின்றன. பிறரும் பாராட்டியிருக்கிறார்கள். அப்படிப் பாராட்டும் பெற்றவற்றுள் 'சலதி' சிறந்தது என்பது எனது கணிப்பு. பல ஆண்டுகளாய் சிலப்பதிகாரத்தோடு உறவு கொண்டதும், அது தொடர்பான பல நூல்களை படித்ததும் மாதவி, கோவலன் பாத்திரங்கள் என் நெஞ்சைத் தொட்டதுமாகிய காரணங்களும், எழுதியே தீரவேண்டும் என்ற பேரார்வமும் சேர்ந்து 'சலதி'யைச் சிறக்கச்செய்தன என்பது என் கருத்து.

**கேள்வி:**

பழம்பெரும் சிறுகதை ஆசிரியர்கள் எழுத்துத் துறையிலிருந்து ஒதுங்கிவிட்டார்கள் நீங்கள் அறுபது வயதைக் கடந்தும் எழுத வேண்டுமென்று இன்னமும் எழுதிவருகிறீர்கள். உங்களுக்கு அலுப்பு ஏற்படவில்லையா?

**பதில்:**

'வாலையில் ஆடிய தேவடியாள் வயதான காலத்திலும் காலைக்காலை ஆட்டுவாளாம்' என்ற பழமொழி தெரியுந்தானே? அவள் நிலை தான் என் நிலையும். அலுப்பு ஏற்படவில்லை என்பது உண்மைதான். ஆனால் இன்றைய எழுத்தின் வேகத்திற்கும் வீச்சுக்கும் என்னால் ஈடு கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறேன். அதனால் என் எழுத் தாக்கம் சென்று தேய்ந்து இற்று வருவதையும் என்னால் உணர முடிகிறது.

**கேள்வி:**

தற்கால - போர்க்கால - இலக்கியங்களை ஆக்காது பல எழுத்தாளர்கள் ஒதுங்கியுள்ளார்கள் அவர்கள் பற்றிய உங்கள் கருத்தென்ன?

**பதில்:**

'சிந்து நதியின் மிசை நிலவினிலே' என்ற பாரதியின் பாடலை அடியொற்றித் தென்றலிலும், நிலவிலும், தெள்ளிய ஆற்றிலும் பவனி வந்தவர்கள், குமுறும் எரிமலைக்கும் வீசும் புயலுக்கும் எதிர்நிற்க முடியாது ஒதுங்கிவிட்டார்கள் போலும்!

'சொல்லுதல் யார்க்கும்
எளிதே அரியவாம்
சொல்லிய வண்ணம்செயல்'

**கேள்வி:**

தாங்கள் தற்பொழுது படைக்கும் படைப்புக்கள் சமகாலத்தைப் பிரதிபலிப்பவையாக இருக்கின்றனவா?

**பதில்:**

சமகாலத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதாலும், அதே சமயம் எனது வாழ்க்கைச் சூழலும், உறவும். நண்பும் ஓர் எல்லைக்குள் கட்டுப்பட்டுக் கிடப்பதாலும், வீச்சோ. பரந்தகளமோ, பெருத நிலையில் ஏதோ எழுதுகிறேன். விரலுக்கேற்றவீக்கமாக அவை சமகாலத்தைப் பிரதிபலிக்கின்றன. என்றே நம்புகிறேன் ஆனால் ஒன்று என் அநுபவத்துக்குள் வராத எதையும் நான் எழுதுவதில்லை என்ற நினைவு உண்டு.

**கேள்வி:**

தற்பொழுது எழுதிக்கொண்டிருக்கும் இளம் எழுத்தாளர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை...?

**பதில்:**

எழுத்துத் துறையிலே சாதனை படைத்தவன் கூற வேண்டியது தான் அறிவுரை என்னை இன்றும் பயிலுநராகவே கருதுவதால் அறிவுரை கூற எனக்குத் தகுதியிருப்பதாக நான் கருதவில்லை. ''சென்ற காலத்தின் சிறப்பையும் நிகழ்காலச் சவால்களையும் எதிர்கால நல்வாழ்வையும் கூறிக்கொண்டு எழுதுவன நிலைத்து வாழும் என்ற நம்பிக்கையை மட்டும் அவர்களுக்கு முன்பு அறிவுரையாக அல்ல - படையலாக வைக்கின்றேன்.

# இவ்வாரம் எப்படி?

**22-10-95 முதல் 28-10-95 வரை**

**மேடம்:**

குடும்பத்தில் மகிழ்ச்சியுண்டு. சகோதரர்கள் ஒத்துழைப்புத் தருவர். தொழிலில் நிலவிய முரண்பாடு அகலும், பணப்புழக்கம் சரளமாக காணப்படும். பயணங்கள் அனுகூலமாக அமையும். வெற்றி வாய்ப்பான வாரம்.

**இடபம்:**

குடும்பத்தில் சலனங்கள் இருப்பினும் மனைவியின் ஒத்துழைப்பால் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளலாம். தொழிலில் மந்தகதி இருக்கும். பணநிலை கவலை தரும். நண்பர் ஆதரவுண்டு. சாமானிய வாரம்.

**மிதுனம்:**

குடும்பத்தில் பகைமை உணர்வு மேலோங்கி காணப்படும். குற்றம் குறைகள் அதிகரிக்கும், தொழிலில் நஷ்டமுண்டு கடன் சுமை உருவாகும். சகோதரர் விரோதம் நிலவும். வைத்தியச் செலவுண்டு. பகைமை வாரம்.

**கடகம்:**

குடும்பத்தில் இனம் புரியாத கவலைகள் இருக்கும், பெரியார் ஒருவரின் வெறுப்புக்கு ஆளாக நேரிடும், தொழிலில் குறைந்த வருமானமுண்டு, பணியாளர் ஒத்துழைப்பு குன்றிக் காணப்படும், அமைதியற்ற வாரம்.

**சிங்கம்:**

குடும்பத்தில் அமைதியுண்டு புத்திரர் கவலை அதிகரிக்கும். தொழிலில் இலாபம் இருப்பி

**கன்னி:**

னும் மறைமுக செலவினமுண்டு. கருமங்கள் தடைப்படும், பணநிலை திருப்தி தர இடமில்லை, சங்கடமான வாரம்.

குடும்பத்தில் நன்மை தீமை கலந்திருக்கும். தொழிலில் கடின உழைப்பும் அலைச்சலும் உண்டு. விருந்தினர்களால் அதிக செலவுண்டு. சமயோசித வருமானம் பாதிக்கும், மாமனார் உறவு கவலை தரும். மத்திம வாரம்.

**துலாம்:**

குடும்பக் கவலைகளும் அதனால் மனவேதனைகளும் அதிகரிக்கும், தொழில் முயற்சிகள் பாதிக்கும், பணநிலை குன்றியே காணப்படும், எதிர்பாராத துன்பங்கள் இருக்கும், தெய்வசிந்தனை அதிகரிக்கும், யோசனைமிக்க வாரம்.

**விருச்சிகம்:**

வார முற்பகுதியில் நிலவிய மகிழ்ச்சி படிப்படியாக குன்றி காணப்படும். மனைவியின் போக்கு மனவேதனை தரும். தொழிலில் அலைச்சலுண்டு. மேலதிகாரிகள் வெறுப்பு நிலவும், பணக் கஷ்டமுண்டு. பதட்டமான வாரம்.

**தனுசு:**

குடும்பத்தில் மகிழ்ச்சியும், சுபகாரிய நிகழ்வுகளுமுண்டு, இனசன ஒத்துழைப்புண்டு, நினைத்ததை சாதிக்க வாய்ப்புண்டு, பணநிலை சிறப்பாக அமையும். பணியாளர்கள் உதவி புரிவர், முயற்சி பலிதமாகும் வாரம்.

**மகரம்:**

குடும்பத்தில் உடல் உபாதைகளும் வைத்திய செலவினங்களுமுண்டு. உறவினர் ஒத்துழைப்புண்டு, கருமங்கள் தாமதமடையும், பொருளாதார நிலை பாதிப்படையும், வீண் சச்சரவுகளுமுண்டு. நன்மையற்ற வாரம்

**கும்பம்:**

குடும்பத்தில் வேற்றுமைகள் நிலவும், எதிர்பாராத துன்பங்கள் இருக்கும், பழைய பிரச்னைகளுக்கு முகம் கொடுக்கவேண்டி இருக்கும், தொழில் மாற்றமுண்டு, கடன்படவேண்டி வரும், அபகீர்த்தியான வாரம்.

**மீனம்**

வீட்டில் மகிழ்ச்சி குன்றிக் காணப்படும். பிறரின் சூழ்ச்சிக்கு ஆளாகவேண்டி வரும், தொழில் கஷ்டங்களும், மனவேதனையுமுண்டு. கருமங்கள் நற்பலனைத் தராது, அயலவர் துன்பமுண்டு, தடுமாற்றமான வாரம்.

கணிப்பு: ஜோஸ்யர்

## கடற்படையினரால்

[5ம் பக்கத் தொடர்ச்சி]

முகாம் பகுதிக்குள் சென்று விட்டது. கரையொதுங்கிய சடலங்களில் சில அடையாளம் காணப்படாத நிலையிலேயே உறவினர்களாலும், ஊரவர்களாலும் அன்று இரவே சவக்காலையில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

சம்பவம் நடைபெற்ற தினம் கட்டுமரங்களில் தொழிலுக்கு சென்று தப்பி வந்த பலரை சம்பவம் நடைபெற்ற மூன்றும் நாள் சந்தித்த வேளை கண்ணீர் மல்க இச்சம்பவத்தை எனக்கு கூறினார்கள்.

## ஜேர்மனியில

(6ம் பக்க தொடர்ச்சி)

'ஆடு, மாடு. தோட்டம் ஏன் என் அம்மாவைக் கூட அடமானம் வைத்து அகதியாய் வந்த 'அப்பாவி மனிதன் நான் என்றும்,

ஜெகன் என்ற கவிஞர் ''இரவல் காருடன் நின்று, நானனுப்பிய புகைப்படத்தை பார்த்து சுதந்திரமும் சந்தோஷமும் தேடி மாத்திரம் வந்துவிடாதே'' என்கிறார்.

இப்படியாக வெளிநாடுகளில் உள்ள பல தமிழர்கள் தாங்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை புலம்பெயர்ந்த இலக்கியங்களாகவும்வெளிப்படுத்தி வருகின்றனர்.

## பொதுநலவாய

(3ம் பக்க தொடர்ச்சி)

யுள்ளதால் இதுபற்றி மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று கூறுகிறது. இந்த வாத விவாதம் மக்களின் வயிற்றில் தான் அடிக்கப்போகிறது. திட்டமிட்டே அரசு புதிய நிபந்தனையை முன்வைத்துள்ளது. ஒன்று வடபகுதிக்கு அனுப்பும் அத்தியாவசியப் பொருட்களை அனுப்பாது அல்லது தாமதமாக அனுப்பி தமிழ் மக்களை அவலத்துக்குள்ளாக்கலாம். இரண்டு உணவுக் கப்பல்களை அரசு தனது இராணுவ விநியோகத்துக்காகவும் உபயோகிக்கலாம். எந்த வகையிலும் பாதிக்கப்படுவது தமிழ் மக்கள் தான்.

## சைக்கிள் உதிரிப்பாகங்கள் விலை அதிகரிப்பு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாவட்டத்தில் சைக்கிள் உதிரிப்பாகங்களுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சைக்கிள் ரயர், ரியூப் உட்பட ஏனைய உதிரிப்பாகங்களின் விலை அதிகரித்துள்ளது.

154

## மின் மாற்றி அழிப்பு

(மட்டக்களப்பு)

களுவாஞ்சிக்குடியில் கட்டிருப்புச் சந்திக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த இலத்திரனியல் மின் மாற்றி இனந் தெரியாதோரால் குண்டு வீசி அழிக்கப்பட்டிருக்கின்றது.

இதனால் கடந்த புதன் கிழமையிலிருந்து அப்பகுதி இருளில் மூழ்கியுள்ளது. எ

## இன்று

(யாழ்ப்பாணம்)

தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் இலக்கிய ஒன்றுகூடல் தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் இன்று 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை, பிற்பகல் 4-00 மணிக்கு செங்கை ஆழியான் தலைமையில் நடைபெறும்.


'புலம்பெயர்ந்தோர் இலக்கியம்' எனும் பொருள் பற்றி எழுத்தாளர் சாந்தன் உரையாற்றுவார்.

## கலாநிதிப் பட்டம்

உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் செல்வி சி. வி. செல்லையா யாழ்ப்பாண பல்கலைக்கழகத் தமிழ்த் துறைக்கு ''கிறிஸ்தவம் வருவதற்கு முன்னும் பின்னும் தமிழ்ப் பெண்களின் நிலை'' என்னும் ஆய்வேட்டை சமர்ப்பித்து கலாநிதிப் பட்டத்தை பெற்றுள்ளனர்.

இவர் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறையில் முதலாவது பெண் கலாநிதி என்பதும் குறிப்பிடத்தக்கது. -எ

# 45-ம் நாள் நினைவஞ்சலி



## அமரர் ஆத்மஜோதி
## நா. முத்தையா

ஆடிக்கலவரம் பல அழிவுகளை ஏற்படுத்தினாலும் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களை நாவலப்பிட்டியிலிருந்து இடம்பெயர வைத்து சாவகச்சேரியில் அமைந்த அவரது தம்பியார் நா. அருமைநாயகத்தின் இல்லத்தில் தங்கவைத்து தென்மராட்சியில் சைவமும் தமிழும் வளர விருத்தியடைய உதவி நற்பயனைச் செய்தது. ஆஸ்துமா நோய் ஆத்மஜோதி ஐயாவை எனக்கு அறிமுகம் செய்து வைத்தது. ஆறுமுகநாவலரை காண்பது போல அந்த அறிமுகத்தை பயன்படுத்தி 83 ஆடிக்கலவர அகதிகளை பராமரிக்கும் பங்கினை ஏற்ற அரிமாக் கழகத்தின் ஏற்பாட்டில் அகதிகள் ஆறுதல் அடைய கதைகள், சமய சொற்பொழிவுகள், பிரசங்கங்கள் செய்து தன் பொதுப்பணியை தென்மராட்சியில் ஆரம்பித்து பின் திவ்ய ஜீவன சங்கம், இந்து சமயப் பேரவை, கைதடி சைவ சிறுவர் இல்லம் போன்றவற்றோடு இணைந்து சமய சொற்பொழிவுகள், பிரசங்கங்கள், பாதயாத்திரைகள் பல பல செய்து சைவத்தை வளர்த்தார். அதோடு தொண்டு செய்பவர்களையும் ஸ்தாபனங்களையும் ஊக்குவித்து வாழ்ந்தவர். அவற்றில் ஒன்று எமது சாவகச்சேரி அரிமாக் கழகம். ஆஸ்துமா நோயினால் வந்த ஆத்மஜோதி ஐயாவை அரிமா கூட்டத்தின்பின் சந்தித்தேன். அவர் இறைபதமெய்திய செய்தியையும் அரிமா கூட்டத்தில் அறிந்து கழக அங்கத்தவரோடு அனுதாபம் தெரிவிக்க அவர் இல்லம் சென்றேன். 31-ம்நாள் நினைவஞ்சலி நிகழ்வுக்கும் அரிமா கூட்டத்தின்பின் அங்கத்தவர்களோடு சென்றேன். இஃது அரிமாக் கழகத்துக்கும் ஆத்மஜோதி ஐயாவுக்கும் பூர்வ வினைப்பயனால் ஏதோ தொடர்பு இருப்பதனைக் காட்டுகிறது.

கனடா செல்லும் முன்பும் பார்வை குறைந்தவர்களுக்கு கண்ணாடி வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து எமது அரிமா சேவைகளை பாராட்டி வாழ்த்திச் சென்றார்.

ஊரெல்லாம் கூட்டி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கிய பிணம் என பேரிட்டு
சுரையம் காட்டிடைக் கொண்டுபோய் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே.

என்ற பாட்டை பொய்மையாக்கி சாவகச்சேரி அரிமாக் கழகம் அவரை என்றும் நினைக்கும் முகமாக அவர் நாமம் நிலைக்குமுகமாக அவரின் அன்பர்கள் அளித்த நன்கொடை மூலம் ஆத்மஜோதி முத்தையா நிதியம் தொடங்கி அவரது விருப்பு செயற்பாடான சிறுரின் கல்வி மேம்பாட்டிற்கு உதவுகிறோம். நிதியத்துக்கு தொடர்ந்து அன்பளிப்பு வந்துகொண்டிருப்பது அவர் மேல் அவர் அன்பர்கள் கொண்டிருக்கும் அன்பையும் நினைவையும் காட்டுகின்றது.

வாழ்க அவர் நாமம் !
வளர்க அவர் விட்டுச்சென்ற பணி ! !

**லயன் டாக்டர் சு. சி. அருளானந்தம்,**
தலைவர்,
அரிமாக் கழகம்,
சாவகச்சேரி.

[ஏ-5398)

# புத்தூர், நவக்கிரியில் கடும் மோதல்

# படையினருக்கு பாரியளவில் இழப்பு

## இரு டாங்கிகள், ஒரு பவள் சேதம்

[யாழ்ப்பாணம்]

புத்தூர் நவக்கிரிப் பகுதிகளில் நேற்று முன்னேற முற்பட்ட இராணுவத்துக்கு எதிராக விடுதலைப்புலிகள் நடத்திய உக்கிர தாக்குதலில் படையினருக்கு பாரிய உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதுடன் இரண்டு டாங்கிகள், ஒருபவள் கவச வாகனம் என்பன தாக்கி சேதப்படுத்தப்பட்டன 12 போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

நேற்றுக்காலை 9 மணிக்கு புத்தூர் நவக்கிரிப் பகுதிகளிலிருந்து படையினர் பெரும் எடுப்பில் முன்னேற்ற முயற்சியை மேற்கொண்டனர். டாங்கிகள், கவசவாகனங்கள் சகிதம் அகோர ஷெல் தாக்குதல்களை நடத்தியவாறு முன்னேற முற்பட்ட படையினருக்கு எதிராக நேற்று மாலை 6 மணிவரை விடுதலைப்புலிகள் பாரிய அளவில் உக்கிர தாக்குதலை மேற்கொண்டனர்.

'சூரிய கதிர்' என்ற பெயரில் இராணுவத்தினர் ஆரம்பித்து நடத்திய ராணுவ நடவடிக்கையின் 6-ம் நாளான நேற்று இப்பாரிய இழப்பை படையினர் சந்தித்தனர்.

### 12 போராளிகள் வீரச்சாவு

நேற்றைய தாக்குதலில் 12 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். ரி

## கொழும்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

இந்த இரு தமிழர் கொலைப்பட்டதன் தொடர்பான மேலதிக விபரம் எதுவும் கிடைக்கவில்லை.

இதேவேளை பல இடங்களில் தமிழர்களின் கடைகள் பல உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருட்கள் சூறையாடப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. -ரி

# தமிழீழ போராட்டத்தில் இணையுமாறு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படைத் தளபதி ஆகியோர் நேரடியாக பலாலி வந்து குடாநாடு மீதான அந்த இறுதிப் படையெடுப்பின் ஆரம்ப விழாவிற்கு ஆசி கூறிச் சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆயினும், 'சன்சைன்' இராணுவ நடவடிக்கைக்கு புலி வீரர்கள் தகுந்த பதிலடி கொடுத்து, படையினருக்கு கணிசமான இழப்பை ஏற்படுத்தியுள்ளனர். எதிரி தரப்பில் அதிகளவு உயிரிழப்புகளை ஏற்படுத்துவதன்மூலம் எதிரியின் படை நகர்வு முயற்சிகளை தடுத்துநிறுத்த முடியும் என்பதற்கு பல உதாரணங்கள் உண்டு

### இனப்படுகொலையே நோக்கம்

குடாநாட்டை பூரணமாகக் கைப்பற்றுவதன் நோக்கம் இயன்றளவுக்கு புலி வீரர்களை கொன்று தள்ளி - புலிகள் இயக்கத்தின் முதுகெலும்பை முறிப்பதே என அரச தரப்பில் இருந்து காரணங்கள் கற்பிக்கப்படுகிறது, ஆனால் போர் என்ற போர்வையில் முடிந்தளவுக்கு தமிழர்களைக் கொன்று வாழ்விடங்களைக் இருந்து அவர்களை விரட்டியடித்து - அவர்களது பொருளாதார பண்பாட்டு வேர்களை அறுத்தெறிந்து இனப்படுகொலை புரிவதுதான் அரச படைகளின் இலக்காக உள்ளது. இந்த நோக்கத்துடன் புலிவீரர்கள் மீது பயன்படுத்தும் அதே அளவு படைக்கலங்களை போர்முனைக்கு அப்பால் உள்ள குடிமனைகள் மீதும் பயன்படுத்தி புலிகளையும் மக்களையும் கொல்லும் ஒரு தமிழினப் படுகொலையில் சிங்களப் படைகள் இறங்கியுள்ளன.

குடாநாட்டை முழுமையாகக் கைப்பற்றி விடுவது என்பதில் சிங்கள அரசு உறுதியாகவே உள்ளது. இது ஈடேறுமா? இல்லையா? என்பதை தமிழரின் படைப்பலம் தான் தீர்மானிக்கும். ஆயினும் குடாநாட்டை விழுங்கும் இலட்சியத்திற்காக கிழக்கு மாகாணத்தின் பெரும்பகுதியை இழந்து தியாகம் செய்யும் அளவுக்கு சிங்கள அரசு உள்ளதை இங்கு நாம் கருத்தில் எடுக்க வேண்டும்.

### நாசகார நோக்கம்

8000 ச.கி.மீற்றருக்கும் மேற்பட்ட பரப்பளவைக் கொண்ட கிழக்கு மாகாணத்தை புறந்தள்ளிவிட்டு, அதற்குப் பதிலாக 400 ச.கி. மீற்றர் பரப்பளவைக் கொண்ட குடா நாட்டைக் கைப்பற்ற தனது படைப்பலம் அனைத்தையும் ஒருங்கிணைத்துள்ள சிங்கள அரசின் தீர்மானத்தின் பின்னாலுள்ள அபாயத்தை குடாநாட்டு மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். குடாநாட்டினைக் கைப்பற்றுவது என்பது வெறுமனே குடாநாட்டின் நிலங்களை கைப்பற்றுவது என்று அர்த்தமாகாது. அல்லது அரசு கூறுவதைப் போல குடாநாட்டில் சிவில் நிருவாகத்தை ஏற்படுத்தும் முயற்சியாகவும் அது இருக்க மாட்டாது அல்லது புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப் படுத்திவிட்டு அரசியல் தீர்வொன்றை தமிழர்களுக்கு வழங்கும் விவகாரமாகவும் அது இருக்க மாட்டாது. உண்மையில், தமிழினத்திற்கு பேரழிவை உண்டுபண்ணும் ஒரு நாசகார நோக்கத்தையே அது கொண்டிருக்கின்றது. குடாநாட்டில் வசிக்கும் சுமார் 10 இலட்சம் மக்களையும் இந்த மக்களின் பொருளாதார வளத்தையும் இந்த இரண்டும் இணைந்து வெளிப்படுத்தும் போராட்ட உறுதியையும் அழிப்பது தான் குடாநாட்டுப் படையெடுப்பின் இராணுவ நோக்கமாகும். இவற்றை அழித்து - துவம்சம் செய்வதன் மூலம் தமிழ் இனத்தின் தனித்துவத்தை இந்தத் தீவில் இருந்து பூண்டோடு பிடுங்கி எறிந்துவிட்டு கதிர்காமர்களைப்போல டக்ளஸ் தேவானந்தாக்களைப் போல சிவசிதம்பரங்களைப் போல இனத் தனித்துவமற்ற தமிழர்களை காட்சிப்பொருளாக இத்தீவில் உலாவவிடுவது தான் சிங்களப் பேரினவாதத்தின் நெடுநாளைய ஆசை. இந்த வரலாற்று ஆசையை குடாநாட்டு படையெடுப்பு என்ற கோதாவில் அரங்கேற்றிவிட சிங்கள அரசு, சகல முன்னேற்பாடுகளையும் செய்துவிட்டது.

### போராட தடை விதிக்கும்

தமிழரின் கைகளிற்கு உரமும் கிருமிநாசினியும் சென்றடையவிடாது தடுத்ததற்குக்காரணம் அதை அவர்கள் இராணுவ பாவனைக்கு பயன்படுத்திவிடுவார்கள் என்பதால் அல்ல. தமிழரின் மீன்பிடிப்படகுகளை கடலில் இறங்கவிடாது அரசு தடைசெய்ததன் நோக்கம் கடற்புலிகளின் செயற்பாட்டைத் தடுப்பதற்காக அல்ல மாறாக தமிழரது பொருளாதாரத்தின் நாடி-நாளங்களான விவசாய-கடல் சார் உற்பத்திகளை சிதைத்து தமிழினத்தை எதிர்பொருள் அற்ற இயந்திரமாக மாற்றி முடக்கிவிடுவதுதான் சிங்கள அரசின் நோக்கம். இந்த நிலையில், குடாநாடும் அதன் மக்களும் சிங்களப் படைகளின் கைகளிற்குள் வீழ்ந்தால், மேலதிகமாக இன்னுமொரு தடையை விதிக்க, அரசு காத்திருக்கின்றது. போராட்டத்தடையே அதுவாகும். போராடும் நிலையில் இருக்கும் இளைஞர்களை - இளம் பெண்களை கொன்றுதள்ளியும் சிறையில் அடைத்தும் போராட்டத் தடையை, அரசபடைகள் அமுல்படுத்தும். இப்படி நடக்க உலகம் விடாது என்று கற்பனையில் நாங்கள் காலத்தைக் கழிக்க முடியாது.

### உலக வரலாறு

உலக வரலாற்றில் இப்படிப் பல கோர சம்பவங்கள் நடைபெறுகின்றன. இஸ்ரேல் இதைத்தான் பாலஸதீன மக்களுக்குச் செய்தது. இந்தோனேசிய ராணுவத்திடமிருந்து வந்த இத்தகைய அபாயம் தான் கிழக்கு தீமோர் மக்கள் தொகையில் மூன்றில்இரண்டு பங்கினரை பலி கொண்டிருந்தது. இவற்றிற்கு எதிராக உலகம் கண்ணீர் விட்டு கண்டன அறிக்கையை வெளியிட்டது உண்மைதான் ஆனால் பாலஸ்தீனர்கள் அகதி முகாம்களில்தான் அல்லல்பட்டனர். கிழக்கு தீமோர் மக்களில் பெரும்பகுதியினர் இனப்படுகொலையால் அழிக்கப்பட்டனர்.

### வரலாற்று நிர்ப்பந்தம்

கடந்த 10 வருடகாலமாக சிங்களப்படையின் இரும்புப் பிடிக்குள் சிக்கியிருந்தகிழக்கு மாகாணத்து இளைஞர் சக்தியில் கணிசமான பகுதி இவ்விதம்தான் அநியாயமாக அழிக்கப்பட்டிருந்தது

1987ம் ஆண்டின் நடுப்பகுதியில் வடமராட்சியின் ஒரு பகுதியை சுற்றி வளைத்த சிங்களப் படைகள் பல்லாயிரம் தமிழ் இளைஞர்களை சங்கிலி போட்டு பிணைத்து பூசா தடுப்பு முகாமிற்கு இழுத்துச் சென்றதை குடாநாட்டு மக்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றோம். அன்றிருந்த நிலை காரணமாக அந்த அப்பாவி இளைஞர்களில் சிலரைத் தவிர, மிகுதிப்பேர் சிறைவாசம் என்ற தண்டனையுடன் தப்பிவிட்டனர். ஆனால் இன்றைய நிலையில் குடாநாட்டின் இளைஞர்கள் சிங்களப் படையின் கைகளிற்குள் சிக்குவார்களானால் எமது இளைஞர்களுக்கு உயிர்ப்பிச்சை கொடுக்கும் நிலையில் சிங்களப் படையினர் இருக்கமாட்டார்கள். கோயில்கள் மீதும், பாடசாலைகள் மீதும் இடம்பெயர்ந்தோடும் மக்கள் மீதும் குண்டுவீசிக் கொல்லும் சிங்களப் படைகள் தமிழரின் போராட்ட சக்தியான இளைஞர் சமூகத்தை விட்டு வைப்பார்களா? அல்லது கண்டதுண்டமாக வெட்டிக் கொல்வார்களா?

வரலாற்றில் என்றோ ஒரு தடவை அல்லது சில தடவைகள் ஒரு தேசத்தின் மக்கள் ஒன்றாக திரண்டெழுந்து, ஆபத்தொன்றிற்கு எதிராகப் போராடவேண்டிய ஒரு வரலாற்று நிர்ப்பந்தத்திற்குஉட்படுவது தவிர்க்க முடியாதது.

இத்தகைய ஒரு வரலாற்று நிர்ப்பந்தம் இன்று குடாநாட்டில் வசிக்கும் 10 இலட்சம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

### என்ன செய்யப் போகிறீர்கள்

குடாநாட்டு மக்களே! நீங்கள் என்ன செய்யப்போகின்றீர்கள்" கிழக்கு தீமோர் மக்களைப் போல கொல்லப்பட அனுமதிக்கப் போகின்றீர்களா? அல்லது பலஸ்தின மக்களைப்போல அகதி முகாம்களுக்குள் காலத்தை கழிக்கப் போகின்றீர்களா?

அல்லது வியட்நாம் மக்களைப் போல - எரித்திரிய மக்களைப் போலப் போராடிச் சுதந்திரமாக வாழப்போகின்றீர்களா?

### ஆட்பலம் வேண்டும்

நாங்கள் கிழக்கு தீமோர் மக்களைப்போல - பலஸ்தீனிய மக்களைப் போல படைபலம் அற்ற ஒரு இனம் அல்லவே. சிங்களப் படையை நடுநடுங்க வைக்கும் ஒரு விடுதலைச் சேனையைக் கொண்ட ஒரு இனம் அல்லவா? வீரத்திற்கும், தியாகத்திற்கும் உலகிற்கே உதாரணமாகத் திகழும் உன்னத வீரர்களைக் கொண்ட பெருமைமிகு இனம் எமது தமிழினம். சிங்களப் படைகளின் மூர்க்கத்தனமான படையெடுப்புகள் பலவற்றை முறியடித்த வரலாறு எமது விடுதலைச் சேனைக்கு இருக்கின்றது. வரையறுக்கப்பட்ட படைபலத்தை வைத்துக் கொண்டே பாரிய இராணுவ வெற்றிகளைப் பெறக்கூடிய திறமை மிகுந்த ஒரு தலைவனை எமது இனம் கொண்டிருக்கிறது. அப்படியெனில் போதியளவு ஆட்பலம் புலிகள் இயக்கத்தில் அதிகரிக்குமானால் எமது இனம் பெறப் போகும் வெற்றிகள் பற்றிச் சிறிது கற்பனைபண்ணிப்பாருங்கள்.

### வாழ்வா? சாவா?

அன்பிற்குரிய மக்களே,

குடாநாட்டைப் பொறுத்தளவில் வாழ்வா? சாவா? என்றொரு நெருக்கடி நிலையே இன்று எம்முன் உள்ளது. போராடினால் வாழ்வு. பயந்தோடினால் சாவு என்றொரு நிலைதான் உள்ளது. இந்த நெருக்கடி நிலையில் இருந்து குடாநாட்டைப் பாதுகாக்க வல்லது புலிகளிடம் உள்ள படைபலம் ஒன்றுதான்.

இந்தப் படைபலத்தை எந்த ஒரு கடவுளும் வரமாகப் புலிகளுக்கு வழங்கமாட்டார்கள். அதேவேளை வானத்தில் இருந்து நிகழும் எந்தவொரு அற்புதமும் சிங்களப் படையெடுப்பில் இருந்து குடாநாட்டு மக்களைப் பாதுகாக்கமாட்டாது. எமது மக்கள்தான் புலிகள் இயக்கத்திற்கான பலத்தை வழங்கும் கடவுள் ஆகும். மக்களின் ஒரு பகுதியினரான எமது இளம்பரம்பரை புலிகளுடன் இணைவதன் மூலம் தமிழரின் படைபலம் உயரும். அந்தப்படையை அதிகரிப்பதுதான் போரில் அற்புதங்களை நிகழ்த்த வல்லது.

### வீட்டுக்கு ஒருவர்

முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையிலிருந்து சன்சைன் இராணுவநடவடிக்கைவரை ஏறக்குறைய முப்பதாயிரம் குடும்பங்கள் தமது இருப்பிடங்களை இழந்து இடம்பெயர்ந்துள்ளன. ஆனால் எங்களை இடம்பெயர வைத்தவர்களுக்கு எதிராக நாம் என்ன செய்தோம் என்று அந்த முப்பதாயிரம் குடும்ப உறுப்பினர்களும் தங்களுக்குள் கேட்டுப் பார்க்கவேண்டும். இந்தக் குடும்பங்களில் இருந்து வீட்டுக்கு ஒருவர் என்ற வீதத்தில் இயக்கத்தில் இணைவார்களானால் நாம் இழந்த ஊர்களையே திரும்பப் பெறமுடியும். படையெடுப்பு ஒன்று நடைபெறும்போது அந்தப் பகுதியிலுள்ள மக்கள் இடம்பெயர்ந்துஓடுவது தவிர்க்கமுடியாததே. ஆனால் அவர்களுடன் எமது இளைஞர்களும் யுவதிகளும் சேர்ந்தோடி இடம்பெயர்ந்தோர் முகாம்களிலோ அல்லது எங்காவது வீடுகளிலோ தங்கி வாழ்வதால் என்ன பயன் ஏற்படப்போகின்றது? இழந்தவற்றை யார் மீட்பது? இடம்பெயர்ந்த மக்கள் எப்போது வீடுகளுக்கு மீண்டும் போவது? மேலும் மேலும் எமது ஊர்களுக்கு எதிரிப்படைகள் புகுவதைத் தடுப்பது யார்?

குடாநாட்டின் மடியில் தவழும் இளைஞர்களே! யுவதிகளே! உங்களது அன்னை மண்ணைப் பாதுகாக்க நீங்கள் அனைவரும் உடனடியாகவே ஆயுதமேந்துங்கள்.

குடாநாட்டின் மூத்த குடிமக்களான பெற்றோர்களே! நீங்கள் வாழ்ந்து அனுபவித்த மண்ணை காக்க உங்களது வீடுகளை காணிகளைப் பாதுகாக்க உங்கள் பிள்ளைகளில் ஒருவரையாவது இயக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்.

எதிர்ப் படைகள் பல ஊர்களைப் பிடித்துவிட்டன. இனி எப்படி அதை மீட்பது என்று அவநம்பிக்கையடையாதீர்கள். இனிமேல் இயக்கத்தில் சேர்வதால் என்ன பிரயோசனம் என்று விரக்தி கொள்ளாதீர்கள். காலம் இன்னும் கடந்துவிடவில்லை. இனியும் தாமதிப்பது ஆபத்து. ஆயிரக்கணக்கில் இளைஞர்கள் இப்போதே இயக்கத்தில் இணைவார்களாக இருந்தால் வெகு விரைவில் படை வீடுகள் தீப்பற்றி எரியும். இயக்கத்தில் இணைய விரும்பும் இளைஞர்கள் யுவதிகள் அரசியல் துறையினரின் சிற்றூர் - வட்ட அலுவலங்களிலும் மற்றும் முகாம்களிலும் இணைந்து கொள்ளவும்.

எல்லாம் இழந்த பின் போராடுவோம் என்றிருப்பதைவிட இருப்பதைப் பாதுகாத்து சுகமாக வாழ்வதற்கு இப்போதே போராட வாருங்கள் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

க-ம-ரி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் பெருமாள் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683618.